பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 10 செவ்வாய்க்கிழமை (24.05.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :179

## ரி.பி.சி. வானொலி நிலையம் சூறையாடப்பட்டது!

கொழும்பு மே24

பிரிட்டிஷ் தலைநகர் லண்டனிலிருந்து ஒலி பரப்பாகி வரும் ரி.பி.சி வானொலி நிலையம் உள்ளூர் நேரப்படி நேற்றுமுன்தினம் இரவு ஒரு மணியளவில் இனந்தெரியாத சில நபர்களினால் சூறையாடப்பட்டிருக்கின்றது. இந்த நிலையத்திலிருந்த செய்மதித் தொடர்பு இணைப்புகள் அறுக்கப்பட்டு பிரதான ஒலிபரப்புச் சாதனங்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என்றும் - வானொலி ஒலி பரப்பு அஞ்சல் நிலையம் முற்றாகச் சூறையாடப் பட்டுள்ளது என்றும் -

புலிகளுக்கு எதிரான செய்திகளை வெளியிட்டு வரும் இணையத்தள ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே கல்விச்சுடர்

5 ஆம் தர புலமைப் பரிசில் மாணவர்களுக்கான கல்விச்சுடர் இலவச இணைப்பிதழ் இன்றைய உதயனுடன் வெளியாகின்றது. உங்கள் முகவரிடம் தவறாமல் கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள்.

# பொதுக்கட்டமைப்பை எதிர்த்து நீதிமன்றம் செல்வதற்கு முடிவு!

## பௌத்த - சிங்கள அமைப்புகள் முஸ்தீபு

கொழும்பு,மே24

**ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்காக விடுதலைப் புலிகளோடு சேர்ந்து பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் திட்டத்துக்கு எதிராக நீதிமன்றம் செல்வதற்கு பௌத்த - சிங்கள அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் தயாராகி வருகின்றன எனத் தெரியவருகிறது.**

ஆனாலும், உத்தேச பொதுக்கட்டமைப்பின் உள்ளடக்கம் என்ன, அதற்குப் பொறுப்புக் கூறுபவர்கள் யார் என்பன பற்றிய விவரங்கள் தெரிந்த பின்னரே அதற்கெதிராக சட்டநடவடிக்கை எடுக்கமுடியுமென மேற்படி அமைப்புகளுக்குப் அரசியல் கட்சிகளுக்கும் சட்ட ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

இந்த விவகாரம் தொடர்பில் நேற்று உதயனுக்குக் கருத்துத் தெரிவித்த தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் வண. எல்லே குணவன்ஸ தேரர், பொதுக்கட்டமைப்பிற்கெதிரான சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு நாற்பதுக்கும் மேற்பட்ட பௌத்த அமைப்புகள் கோரிக்கை விடுத்திருக்கின்றன எனவும், ஆனால், இதன் உள்ளடக்கத்தை அறிந்த பின்னரே நீதிமன்றத்திற்குச் செல்லமுடியுமென்றும் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

(12ஆம் பக்கம் பார்க்க)



நாட்டுப்பற்றாளர் செம்பியன் செல்வனின் இறுதியஞ்சலி நிகழ்வு நேற்று நடைபெற்றது. அப்போது விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி அன்னாரின் பூதவுடலுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துகிறார்.

(மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்)

## பாதுகாப்பு வலயத்தால் இடம்பெயர்ந்தோரை வேறிடத்தில் குடியமர்த்துவது சாத்தியமற்றது

### யாழ்.மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.மே24

யாழ்.குடாநாட்டின் உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு வீட்டுத் திட்டங்களை அமைத்துக் கொடுப்பது சாத்தியமற்றது.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ்.

யாழ்.குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயம் என இராணுவம் பிரகடனப்படுத்திய பிரதேசங்களிலிருந்து ஏராளமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களுக்கு வேறு இடங்களில் குடியிருப்புகளை அமைத்துக் கொடுப்பது என்பது சாத்தியமற்றது. ஏனெனில் ஒவ்வொரு பிரதேச மக்களும் தத்தமது பிரதேசத்துக்கேற்பத் தமது தொழில்களையும் பாரம்பரியங்களையும் வளர்த்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வீதிகளை அகலமாக்கும் பணியில் மக்கள் கருத்துக்கு முன்னுரிமை

யாழ்ப்பாணம், மே24

குடாநாட்டின் ஆறு பிரதான வீதிகளை அகலமாக்கும் - புனரமைக்கும் - விவகாரத்தில் பொது மக்களின் கருத்துக்களுக்கும் ஆலோசனைகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் வாகனப் போக்குவரத்து அதிகரித்து வருகிறது. இதனால் வீதி விபத்துக்களும் அதிகம் இடம்பெறுகின்றன. ஆகவே, பிரதான வீதிகளை அகலமாக்கிப் புனரமைக்கும் தேவை எழுந்துள்ளது. இதுதொடர்பான ஆலோசனைக்கூட்டம் ஒன்று கடந்த மாதம் எனது அலுவலகத்தில் இடம்பெற்றது. அக்கூட்டத்தில் சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினரிடமிருந்தும் வீதி அகலமாக்கிப் புனரமைப்பது தொடர்பான ஆலோசனைகள் பெறப்பட்டன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய ஒன்றியத் தூதர் தமிழ்ச்செல்வனுடன் பேச்சு

கிளிநொச்சி.மே24

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதர் வூட்டோ வில்சன், இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதர் சுசான் பிளங்கட் அம்மையார் ஆகியோர் நாளை புதன்கிழமை கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொள்கிறார்கள். நாளை முற்பகல் 10.30 மணியளவில் அவர்கள் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் சமகால அரசியல்நிலைமை குறித்துப் பேச்சுக்கள் நடத்துவர்.

கடந்த மாதம் ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்ட தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் குழுவினர் அங்கு ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நெதர்லாந்து ஆகியவற்றின் உயர்மட்டத் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்கு உதவும்படி புலிகளின் அரசியல் குழுவினர் அப்போது கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதன் தொடர்ச்சியாகத் தமிழ்ச்செல்வனுடன் பேச்சுக்களை நடத்தவே அந்த நாடுகளின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தந்தையுடன் வீதியில் நடந்துசென்ற சிறுவன் மோ. சைக்கிள் மோதிப் பலி!

### பருத்தித்துறை ஆலடியில் பரிதாப சம்பவம்

கரவெட்டி,மே24

தனது தந்தையாருடன் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த மூன்று வயதுச் சிறுவனை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று மோதிக்கொன்றது.

சிறுவனை உயிர்ப்பலி எடுத்த மோட்டார் சைக்கிள் அந்த இடத்தில் நிற்காது பின்னர் தப்பிச் சென்றுவிட்டது.

இந்தப்பரிதாபச்சம்பவம்-விசாகப்பௌர்ணமி தினமான நேற்றுக்காலை பருத்தித்துறை ஆலடிப்பகுதியில் இடம்பெற்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மற்றுமொரு புத்தர் சிலை திருமலையில் முளைத்தது!

திருகோணமலை.மே24

திடீர் திடீரென முளைக்கும் புத்தர் சிலைகளால் பதற்றத்துக்கு உள்ளாகியிருக்கும் திருகோணமலை நகரில் மற்றொரு புத்தர் சிலை நேற்று வீதியோரத்தில் திடீரென முளைத்தது. திருகோண மலை, ஏகாம்பரம் வீதியில் (என்.ஸி.வீதியில்), சிறிமாபுரம் - லவ்லேன் ஆகியவற்றுக்கு அருகில் வீதியோரமாக இந்த இரண்டரை அடி உயரப் புத்தர்சிலை நிறுவப்பட்டுள்ளது. அந்தச் சிலை ஸ்தாபிக்கப்பட்ட இடத்தில் சிமெந்துப் பூச்சுக்கள் காய்வதற்காக சிலை வெள்ளைத்துணியால் மூடப்பட்டு அப்படியே விடப் பட்டிருந்தது. வெள்ளைத் துணியை அகற்றி சிலையை எப்போது திறந்து வைப்பார்கள் என்பது தெரியவரவில்லை.

வெசாக் தினத்தை முன்னிட்டு சிறிமாபுரம் பகுதியில் சோடனைகள் அமைக்கும் வேலை

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.கிரிமிச்சையில் சூட்டுக்கு ஒருவர் பலி; மற்றொருவர் காயம்!

கொழும்பு.மே24

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மற்றொருவர் படுகாயமுற்று வாழைச்சேனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் கிரிமிச்சை என்னும் இடத்தில் இடம்பெற்றுள்ளதாகத் தங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது என்று இராணுவத் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கதிரமலை நவரத்தினம் (வயது -45) என்பவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் நேற்றுவரை அடையாளம் காணப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இனந்தெரியாத ஆயுததாரிகள் மறைந்திருந்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## இரவிரவாகக் குண்டுவெடிப்புகள்!

திருகோணமலை,மே24

திருகோணமலை நகரப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10.30 மணிமுதல் நேற்று அதிகாலை 1.30 மணிவரை சுமார் ஒன்பது குண்டுகள் ஆங்காங்கே வெடித்தன. இந்தச் சம்பவங்களை ஒட்டி ஏழு தமிழ் இளைஞர்களைப் பொலீஸார் கைதுசெய்து நீதிவான் முன்னிலையில் ஆஜர்செய்தனர். அவர்களைப் பிணையில் விடுவித்தார் நீதிவான்.

(12ஆம் பக்கம் பார்க்க)



நாட்டுப்பற்றாளர் செம்பியன் செல்வனின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் யாழ். அத்தியடியில் அன்னாரது இல்லத்தில் நேற்று நடைபெற்றது. கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை அஞ்சலி உரை நிகழ்த்துவதை முதலாவது படத்தில் காணலாம். அஞ்சலி நிகழ்வுக்குத் தலைமை வகித்த எழுத்தாளரும் யாழ். மாநகர சபை ஆணையாளருமான கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்) வும் படத்தில் உள்ளார். செம்பியன்செல்வனின் புகளுடலை எழுத்தாளர்கள் சுமந்து செல்வதையும் புகழுடல் தாங்கிய ஊர்தி கோம்பையன்மணல் மயானம் நோக்கிப் புறப்படுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : பிரபா, கவிதரன்)

# ஆழ ஊடுருவித் தாக்கும் படை வன்னிக்குள் புகுந்துள்ளதாம்!

கொழும்பு,மே24

வன்னிக்குள் இலங்கை அரசு மௌன யுத்தம் ஒன்றைப் பிரகடனப்படுத்தியுள்ளது என்றும் - இலங்கை அரசின் பாதுகாப்புப் பிரிவினரில் பலர் வன்னிப் பெருநிலப்பரப்பிற்குள் ஊடுருவியுள்ளனர் என்றும் -

புலிகளுடன் தொடர்புடைய இணையத் தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இப்படி ஊடுருவிய ஆள்களை, மடக்குவதற்காக வன்னிப் பெருநிலப்பரப்பில் புலிகளின் தீவிர தேடுதல் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டிருக்கின்றன எனவும் அறிவிக்கப் பட்டிருக்கின்றது.

மேற்படி இணையத்தளச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கை அரசு மௌன யுத்தத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளது. இலங்கை அரசின் பாதுகாப்புப் பிரிவினரின் ஆழ ஊடுருவித் தாக்கும் படைப்பிரிவினர் பலர் வன்னிப் பெருநிலப்பரப்பிற்குள் ஊடுருவியுள்ளனர். வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரசாரங்கள் முடுக்கிவிடப் பட்டுள்ளன.

இவர்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டும் வேலைகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வன்னிப் பெருநிலப்பரப்பில் தீவிர தேடுதல்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன. பல ஆயிரம் விடுதலைப் புலிப் போராளிகள் வன்னிப் பெருநிலப்பரப்பை ஒவ்வொரு அங்குலமாகச் சோதனையிட ஆரம்பித்துள்ளார்கள். பல ஆயிரம் போராளிகள் வீதிகளில் நடமாடுகிறார்கள். வன்னியின் அனைத்துப் பிரதேசங்களிலும் 24மணிநேரத் தொடர் கண்காணிப்பில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

வன்னிக்குள் ஆழ ஊடுருவித்தாக்கும் அரச புலனாய்வுப் பிரிவினர் ஆயுதங்களைக் கடத்தி வந்துள்ளார்கள் எனவும் அறியமுடிகிறது. இவ்விடயத்தை ஒட்டிய முன்னெச்சரிக்கைகள் பரவலாக வன்னிப் பெருநிலப்பரப்பெங்கும் அறிவிக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் முக்கிய பிரதிநிதிகள் பலர் இலக்குவைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரியவருகிறது. விடுதலைப் புலிகளின் திடீர் சுற்றிவளைப்புக்களால் கதிகலங்கிப்போன பல அரச உளவாளிகள் தப்பியோட எத்தனித்துப் பின்னர் விடுதலைப் புலிகளின் இரவு ரோந்துப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இன்றும் பலர் இரவு நேரங்களில் அடையாள ஆவணங்களில் தலைமாறாட்டம் செய்து ஏ-9 பாதையூடாகத் தப்பிச்செல்ல எத்தனிக்கிறார்கள் எனவும் அறியமுடிகிறது.

பல ஆயிரம் தொண்டர் அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் வன்னிப் பெருநிலப்பரப்பில் இரவுநேரக் கண்காணிப்பில் ஈடுபட்டுவருகிறார்கள் - இவ்வாறு அந்த இணையத்தளச் செய்தி மேலும் தெரிவித்தது.

# செம்பியன்செல்வனின் புகழுடல் நேற்று தீயுடன் சங்கமமானது

மூத்த எழுத்தாளரும் இலக்கியவாதியுமான ஆறுமுகம் இராஜகோபாலின் (செம்பியன செல்வன்) இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றன. கோம்பையன்மணல் மயானத்தில அன்னாரது உடல் தீயுடன் சங்கமமானது.

யாழ். அத்தியடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற இறுதிக்கிரியைகளில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை உட்பட விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய பிரமுகர்களும், யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், பத்திரிகைத்துறை சார்ந்தவர்கள், எழுத்தாளர்கள், கல்விச் சமூகத்தவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு எழுத்தாளர் செம்பியன் செல்வனது பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். நாட்டுப்பற்றாளர் செம்பியன்செல்வனது புகழுடல் புலிக்கொடியால் போர்த்தப் பட்டிருந்தது.

தேசியத் தலைவரின் சார்பில் நாட்டுப்பற்றாளர் கௌரவத்தை புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் வழங்கினார்.

இரங்கலுரைகளைத் தொடர்ந்து பூதவுடல் கோப்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு எரியூட்டப்பட்டது.

தொடர்ந்து கலாநிதி க.குணராசா தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. பத்திரிகையாசிரியர்கள், எழுத்தாளர்கள், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் எனப் பலரும் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.(எ-13-7-111)

# சேது கால்வாய்த் திட்டம் அமுலானால் நாட்டின் சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு!

## சுற்றுச் சூழல் ஆய்வாளர்கள் தரப்பில் தெரிவிப்பு

கொழும்பு,மே24

சேது கால்வாய்த் திட்டத்தினால் இலங்கைக்கான சுற்றுச்சூழலின் பாதிப்பு பாரியதாக இருக்கும் என்று சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

சேதுகால்வாய்த் திட்டத்தின் படி கடலை ஆழப்படுத்தும் போதும், அதைத் தொடர்ந்த நடவடிக்கைகளாலும் மீன் இனங்களும் பவளப் பாறைகளும் தொடர்ந்து அழிந்துவிடும் என்று சுற்றுச் சூழல் அமைப்பின் நிர்வாகி சட்டத்தரணி ஜெயத் குணவர்த்தன தெரிவித்தார்.

இதுவிடயமாக அவர் கூறியதாவது:-

சேது சமுத்திரத்தைத் தொடங்கும் முன்பாக சுற்றுச் சூழல் தொடர்பான பாதிப்புக்களை ஆய்வு செய்யுமாறு இந்தியாவுக்கு இலங்கை அரசு கோரிக்கை விடுக்கவேண்டும்.

முக்கியமாக பாக்குநீரிணை மற்றும் மன்னார் வளைகுடா பகுதியில் இந்தக் கால்வாய்க்கான ஆழப்படுத்தும் பணிகள மேற்கொள்ளப் படவுள்ளன.

இந்தக் கால்வாய் பணிகள் இலங்கைக்கு மிக அருகில் மேற்கொள்ளப்படவுள்ளதால் இலங்கையின் சுற்றுச் சூழல் கடுமையான பாதிப்புகளைச் சந்திக்க நேரிடும் - என்றார் அவர். (எ-8)

# சேதுகால்வாய்த் திட்டத்தை எதிர்த்து தமிழக தலைமை நீதிமன்றில் வழக்கு

சென்னை,மே24

இலங்கை மற்றும் தமிழ்நாட்டுக் கடற்பரப்பில் இந்தியக் கூட்டரசு மேற்கொள்ளவுள்ள சேதுகால்வாய்த் திட்டத்தை எதிர்த்து இந்தியத் தன்னார்வ நிறுவனம் தமிழ்நாட்டுத் தலைமை நீதிமன்றத்தில் வழக்குத் தொடரத் திட்டமிட்டுள்ளது.

சுற்றுச் சூழலைப் பாதிக்கும் இத்திட்டத்திற்குத் தடை விதிக்கக் கோரி சென்னையை மையமாகக் கொண்டு இயங்கும் மேற்படி தன்னார்வ அமைப்பான கடலோர நடவடிக்கைகளுக்கான அமைப்பு இந்த வழக்கைத் தொடர உள்ளது.

கடந்த 19ஆம் திகதி இந்தியக் கூட்டரசு சேது கால்வாய்த் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது. 145 ஆண்டு காலமாகப் பரிசீலிக்கப்பட்டு வந்த இந்தத் திட்டம் தற்போதைய இந்தியக் கூட்டரசால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

சேது கால்வாய்த் திட்டத்தை எதிர்ப்பது ஏன்? என்று இந்தியத் தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளித்த சென்னை தன்னார்வ அமைப்பின் நிர்வாகி ஆசி பெர்னாண்டஸ், கடல் உயிரிச் சூழலை மிகக் கடுமையாக இது பாதிக்கும். மன்னார் மற்றும் பாக்கு நீரிணையில் உள்ள பவளப் பாறைகள் இத்திட்டத்தால் அழிந்துவிடும் என்று கூறியுள்ளார். (எ-8)

# தமிழகத்தில் பிறமொழி எதிர்ப்புப் போராட்டம்: பழ.நெடுமாறன், திருமாவளவன் கைது!

சென்னை,மே24

தமிழ்நாட்டில் வணிக நிறுவனங்களின் பெயர்ப்பலகைகளில் தமிழில் மட்டுமே எழுத வேண்டும் என்பதை வலியுறுத்தி பிறமொழியில எழுதப்பட்டுள்ள பலகைகள் மீது தார்பூசும் போராட்டம் நடத்திய தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத் தலைவர்கள் பழ.நெடுமாறன், டாக்டர் ராமதாஸ், தொல். திருமாவளவன், பாவலர் அறிவுமதி, இயக்குநர் சீமான் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் நேற்று கைதுசெய்யப் பட்டனர். சென்னை அரசு தலைமை பொதுவைத்தியசாலை அருகே நேற்றுக் காலை பழ.நெடுமாறன் தார் ஏந்தி பெயர்ப்பலகைகளில் பிறமொழியை அழித்து போராட்டத்தைத் தொடக்கி வைத்தார்.

அவரைத் தொடர்ந்து தமிழ்பாதுகாப்பு இயக்கத் தலைவர்களும் பிறமொழிகளைத் தார் பூசி போராட்டம் நடத்தினர். பின்னர் அங்கு பெருமளவில் குவிக்கப்பட்ட காவல் துறையினரால் அனைவரும் கைதுசெய்யப்பட்டனர்.

தமிழ்நாடு முழுவதும் நேற்றுமுன்தினம் இரவு முதலே தார் பூசும் போராட்டத்தை பல்வேறு இயக்கத்தினர் ஆரம்பித்திருந்தனர்.

சென்னையில் நேற்றுக் காலை போராட்டம் தொடங்கிய நேரத்தில் தமிழ்நாட்டின் இதர பகுதிகளில் தார் பூசி அழிக்கும் போராட்டம் நடத்தப்பட்டது. (எ-8)

# சாவகச்சேரி மோதலில் இருவர் காயம்

தென்மராட்சி,மே24

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இரு குழுக்களுக்கிடையிலான மோதலில் இருவர் காயங்களுக்குள்ளாகினர்.

சம்பவத்தில் காயமடைந்த உதயகுமார் அகிலன் (வயது 16), ரீ.தசீபன்(வயது 19) ஆகிய இருவரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் அகிலன் என்பவர் பின்னர் யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார்.

புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனை செய்பவர்களிடையே இந்த மோதல் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

இந்த மோதல் சம்பவம் தொடர்பாக நேற்றைய உதயனின் பின் பக்கத்தில் ஒரு செய்தி பிரசுரமாகி இருந்தது.

மோதல் சம்பவம் சப்பச்சிமாவடியில் ஆலய உற்சவம் ஒன்றைத் தொடர்ந்து ஏற்பட்டதாக முன்னர் கிடைத்த தகவல் அந்தச் செய்தியில் இடம்பெற்றிருந்தது. அது தவறு என்று எமது செய்தியாளர் அறிவிக்கிறார்.

அந்தச் செய்தியினால் குறிப்பிட்ட பிரதேச மக்களுக்கும் சம்பந்தப்பட்ட ஆலய நிர்வாகிகளுக்கும் ஏற்பட்டிருக்கக்கூடிய பாதிப்புக்களுக்கும் மன உளைச்சல்களுக்கும் வருந்துகின்றோம். (ஐ)

# மூன்றாவது ஆட்டத்திலும் பாகிஸ்தான் வெற்றி; மேற்கிந்திய அணிக்கு வழமையான தோல்வி

பாகிஸ்தான் - மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையே சென்லூசியாவில் நேற்று முன்தினம் நடந்த மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் 22 ஓட்டங்களால் வெற்றியடைந்தது. எனவே 3:0 என்ற முன்னிலையில் ஒரு நாள் தொடரை முற்றாகக் கைப்பற்றியது பாகிஸ்தான்.

இந்த ஆட்டத்துக்கான பாகிஸ்தான் அணியில் இன்சமாம் காயம் காரணமாக விளையாடவில்லை. அவருக்குப் பதிலாக பசிட்கான் களமிறங்கினார்.

மேற்கிந்திய அணியில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மார்ஷல், வேகப்பந்து வீச்சாளர் பவல் நீக்கப்பட்டு, வெவல் ஹின்ட்ஸ், கொலின்ஸ் ஆகிய இருவரும் களமிறக்கப்பட்டனர்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்திய அணித்தலைவர் சந்தர்போல், பாகிஸ்தானை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு அழைத்தார். இதன்படி, களமிறங்கிய அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 303 ஓட்டங்களைப் பெற்றது.

தொடக்க ஆட்டக்காரர் அப்ரிடி அதிரடியாக ஆடி 2 சிக்ஸர்கள், 6 பவுண்டரிகள் அடங்கலாக 30 பந்துகளில் 56 ஓட்டங்களைக் குவித்தார். பசிட்கான் 66 ஓட்டங்களையும், யுஹானா 56 ஓட்டங்களையும், யுனுஸ்கான் 40 ஓட்டங்களையும் பெற்றனர். ஆட்டத்தின் கடைசி ஓவரின் கடைசி மூன்று பந்துகளில் விக்கெட் காப்பாளர் கம்ரன் அக்மல் 3 சிக்ஸர்களை அடித்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை 303 ஆக உயர்த்தினார்.

பந்து வீச்சில் மேற்கிந்திய அணி சார்பாக பிரட்ஷோ, கொலிமோர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், ஹின்ட்ஸ் ஒரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

வெற்றி இலக்காக 304 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணி 49.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 281 ஓட்டங்களைப் பெற்றது. இதன்படி இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் 22 ஓட்டங்களால் வெற்றியடைந்தது.

மேற்கிந்திய அணி சார்பாக கிறில் கைல் மட்டுமே சிறப்பாக விளையாடி 124 ஓட்டங்களைக் குவித்தார். மற்ற வீரர்கள் எவரும் சோபிக்கவில்லை.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக அப்துல் ரசாக் 4 விக்கெட்டுக்களையும், நவீட் 3 விக்கெட்டுக்களையும், மலிக் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்த ஆட்டத்தின் ஆட்ட நாயகனாகவும், தொடரின் நாயகனாகவும் பாகிஸ்தானின் அதிரடி ஆட்டக்காரர் சயிட் அப்ரிடி தெரிவு செய்யப்பட்டார்.

இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பமாகின்றது. (க-3)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# பேரினவாதக் குறியீடாக மாறும் புத்தர் சிலை

மத உணர்வு வேறு; மத வெறி வேறு. இரண்டையும் திட்டவட்டமாகப் பிரிக்கும் ஒரு துல்லியமான கொள்கை நிலை தெளிவாக உண்டு.

இலங்கையில் புத்தபகவானின் பெயரால் அரங்கேறுவது மத உணர்வையும் தாண்டி மதவெறியாக அமைந்திருப்பதுதான் வேதனை.

பௌத்த, சிங்கள மேலாண்மைப் போக்கு முதலில் தனது பேரினவாதப் பிடியை நிலைநிறுத்துவதற்கு சிங்களத்தை ஆயுதமாக எடுத்தது. ஐம்பதுகளின் பிற்பகுதியில் சிங்களத் திணிப்பு என்று ஆரம்பித்த கபளீகர நடவடிக்கை இப்போது பௌத்த மதம் என்ற ஊடகத்தையும் தனது நகர்வுக்குப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறது. அதனால் ஏற்பட்ட அவலத்தைத்தான் இன்று திருமலையிலும், உல்லையிலும் ஏனைய பல இடங்களிலும் நாம் எதிர்கொள்கின்றோம்.

கடவுள் கொள்கையை கௌதம புத்தர் வலியுறுத்தவில்லை. சிலை வழிபாட்டை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. பாவம் - புண்ணியம், நல்வினை - தீவினை பற்றியெல்லாம் அவர் பேசினார். தம்மத்தை (தர்மத்தை) அவர் வலியுறுத்தினார்.

ஆனால், இன்று அந்த மகானைப் பின்பற்றுபவர்கள் என்று கூறிக்கொள்வோர் என்ன செய்கிறார்கள்? புத்தர் காட்டிய பௌத்தத்துக்கே இழிவாக நடந்துகொள்கிறார்கள்.

அழிந்துபோகும் மனித உடம்பைப் போற்றாதே என்ற புத்தரையே - சிலை வணக்கத்தை வரவேற்காத அந்த ஞானியையே - வானளாவும் உயரத்துக்கு சிலைகளாக்கினார்கள். கடவுள் கோட்பாட்டை வலியுறுத்தாத புத்தரையே கடவுளாக்கி வழிபடுகிறார்கள். அவர் வலியுறுத்திய நல்வினை - தீவினை, தர்மம் எல்லாவற்றையும் மறந்தார்கள். அதர்ம வழியை நாடி நிற்கின்றார்கள்.

அயலானையும், அயல் இனத்தவனையும் நேசிக்கும் கௌதம புத்தரின் மாண்பு இங்கு பௌத்தத்தின் பெயரால் மரணித்துப் போனது. சமாதானத்தை வற்புறுத்திய அந்த மகானைப் பின்பற்றுவோர் என்று தங்களைக் கூறிக்கொள்வோர் சமாதான விரோதிகளாச் செயற்படும் அவலம் தென்னிலங்கையில்.

'புத்தம் சரணம் கச்சாமி; தர்மம் சரணம் கச்சாமி; சாங்கம் சரணம் கச்சாமி' என்ற உயரிய நிலை மறந்து 'தமிழன் மரணம் கச்சாமி' என்று போற்றும் நிலைமை பௌத்த - சிங்கள மேலாண்மைவாதிகளால் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சநிலைமை தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

அந்த உயரிய - மாண்புமிக்க - மகானின் உருவச் சிலையைப் பேரினவாதத்தின் குறியீடாக மாற்றிய அகோரம் இங்குதான் அரங்கேறுகின்றது.

சாந்தசொரூபியான புத்த பெருமானின் பெயரால் - சாத்வீகம் போதித்த அந்த உத்தம மகானின் வழிகாட்டலின் பெயரால் - இம்சை நிகழ்வது இந்த நாட்டின் விநோதம்.

மேலாண்மைவாதத் திணிப்பின் ஓர் அங்கமாக மீன் சந்தை, சாராயக்கடை, சாக்கடை ஆகியவற்றுக்கும் மத்தியிலும், குடிபான பார்களுக்கு அண்மையிலும் இந்த மகானின் சிலையை இரவோடு இரவாக இருத்தும் அலங்கோலம் கூட நடக்கிறது.

புத்தர் போதித்த அறநெறிகள் மீதோ, அவரது வழிகாட்டலில் உருவான பௌத்த மார்க்கத்தின் மீதோ தமிழர்களுக்குக் காழ்ப்புணர்வு ஏதும் இல்லை. அந்த உயரிய மார்க்க நெறியை உண்மையாகவே மதித்துப் போற்றி ஏற்றி மகிழ்பவர்கள் தமிழர்கள். அந்த மகானின் தம்ம போதனைகள் இவ்வுலகில் நல்லாட்சிக்கும் நல்வாழ்வுக்கும் வழிசெய்வன என்று கருதுபவர்கள் தமிழர்கள்.

ஆனால், ஈழத்தமிழினத்தின் இருப்புக்கெதிராகவும், அவர்களின் பாரம்பரிய தாயகப் பூமியின் தனித்துவத்தை நாசமாக்கி அதனைக் கபளீகரம் செய்யும் எண்ணத்தோடும் மேற்கொள்ளப்படும் பேரினவாத மேலாண்மைப் போக்கு நடவடிக்கைகளின் - செயற்பாடுகளின் - குறியீடாக புத்தர் சிலைகள் மாறி வருவதே தமிழர்களை விசனம் கொள்ள வைத்திருக்கின்றது.

மொழியின் பெயரால் எழுந்த இனவாதம் மதத்தின் பெயரால் விஸ்வரூபம் எடுப்பது மிகவும் மோசமான நிலையை ஏற்படுத்தும்.

தங்களை சிங்கள, பௌத்தர்கள் என்று கூறிக்கொள்ளும் தென்னிலங்கையரைப் பார்த்து தமிழர்கள் கேட்பது ஒன்றே ஒன்றைத்தான். "உண்மையான பௌத்தர்களாக நடந்துகொள்ளுங்கள்!" என்பதுதான்.

"இரண்டு தசாப்த காலத்துக்கு முன்னர் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்தபோதுஜே.ஆர். ஜெயவர்த்தனா உண்மையான பௌத்தராக இருந்திருப்பாரோயானால் (செயற்பட்டிருப்பாரேயானால்) நான் ஆயுதம் தூக்க வேண்டிய தேவையே வந்திருக்காது" - என்று தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் கூறியதை இங்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா உண்மையான பௌத்தராக நடக்கத் தவறியதால் இன்று நாடுபடும் அவலமானது, தென்னிலங்கையருக்கு இன்னும் நல்லபாடத்தைப் படிப்பிக்கவில்லை என்றால் இந்த நாட்டுக்கு மீட்சியே இல்லை.

ஜே.ஆர். விட்ட அதே தவறுகளை இப்போதும் தொடர்ந்து மேற்கொண்டு நாட்டுக்கு மேலும் அவலங்களை ஈட்டிக் கொடுக்காதீர்கள் என்பதுதான் எமது வேண்டுகோள்.

உண்மையான பௌத்த தமிழினத்தை அடிமை கொள்ளவோ அவர்களுக்குக் கௌரவத்துடன் கூடிய வாழ்வை அளிக்காமல் தடுக்கவோ வழிகாட்டவில்லை. மதத்தின் பெயரால் அந்த மகானை கேலிக்குள்ளாக்காதீர்!

# நிவாரணம் இன்றி வாழ்க்கை நடத்த முடியாத குடும்பங்களின் விவரம் சேகரிப்பு

வலி.வடக்கு,மே24

நிவாரணம் இன்றி வாழ்க்கையைக் கொண்டு நடத்தமுடியாத குடும்பங்களின் விவரங்கள் திரட்டப்படவுள்ளன.

யாழ். செயலகம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்தோருக்கு 1996 முதல் நிவாரண உணவுப் பொருள்கள் மாதாந்தம் வழங்கப்பட்டு வந்தன. இந்த நிவாரணம் பின்னர் பல தடவைகள் குடும்ப விவரங்கள் மீளாய்வு செய்வதன் மூலம் குறைக்கப்பட்டுவந்தது. கடைசியாக கடந்த மாதம் முதல் முற்றாகவே அது நிறுத்தப்பட்டுவிட்டது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்துக்கான நிவாரணமே இறுதியாக வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலைமையில் நிவாரணத்தைத் தொடர்ந்து வழங்கவேண்டும் என்று பொது அமைப்புகள் பலவும் அரசுக்குப் பல்வேறு மகஜர்களை அனுப்பியிருந்தன. இந்த நிலைமையில் குடும்பத் தலைவர்களை இழந்து நிர்க்கதியாக உள்ள குடும்பங்கள், பெண்களைக் குடும்பத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்கள், மாதாந்த உதவிப்பணம் பெறும் குடும்பங்கள் மற்றும் வறுமையிலும் வறுமையான குடும்பங்கள் என வகைப்படுத்தப்பட்டு விவரங்கள் சேகரிக்கும் முயற்சியில் கிராம அலுவலர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த விவரங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தொகுக்கப்பட்டு மாவட்ட செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்படும். (எ-86)

# பாடசாலையில் பயிலும் மாணவர்கள் பிரத்தியேக பரீட்சார்த்தியாக விண்ணப்பித்தால் நடவடிக்கை

## பரீட்சை ஆணையாளர் நாயகம் மகிந்த விஜேசிறி அறிவிப்பு

காரைதீவு,மே24

பாடசாலையில் தற்போது கல்வி பயிலும் மாணவர் எவரும் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குப் பிரத்தியேகமாக தனிப்பட்ட பரீட்சார்த்தியாக (Private Condi date) தோற்றமுடியாது.

- இவ்வாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் மஹிந்த விஜேசிறி அறிவித்துள்ளார். அவ்வாறு தனிப்பட்ட பரீட்சார்த்தியாகப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் பரீட்சையிலிருந்து விலக்கி வைக்கப்படுவர் என்றும் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் பெரும்பாலான பாடசாலைகளில் தரம் - 10, தரம் - 09 ஆகிய வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தனிப்பட்ட பரீட்சார்த்தியாக விண்ணப்பித்து தோற்றிய சம்பவங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

பரீட்சைக்குத் தம்மைத் தயார்ப்படுத்தும் நோக்கிலும் சுயமதிப்பீடு செய்து கொள்ளவும் இப்படிச் செய்கிறார்கள் எனச் சில அதிபர்களும் விளக்கம் அளித்துள்ளனர்.

எனவே, இதனைத் தவிர்க்கும் பொருட்டு பாடசாலையில் பயிலும் மாணவர்கள் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தனிப்பட்ட பரீட்சார்த்தியாகத் தோற்ற முடியாது எனப் பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். (எ-84)

# நயினாதீவுக்கு பக்தர்களை ஏற்றும் படகுகளில் உயிர்காப்பு அங்கிகள் இருத்தல் அவசியம்

## யாழ். செயலகக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,மே24

நயினாதீவுநாகபூசணி அம்மன் ஆலய உற்சவத்திற்குப் படகுகளில் பயணம் செய்பவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் படகுகளில் உயிர்காப்பு உபகரணங்கள் பொருத்தப்பட்டிருக்கவேண்டும்.

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்துக்கான ஏற்பாடுகள் தொடர்பான கூட்டம் ஒன்று கடந்த வியாழக்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திலேயே மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வேலணை, ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர்கள், ஊர்காவற்றுறைப் பொலீஸார், கடற்படையினர் உட்பட மற்றும் பலர் இந்தக் கூட்டத்தில் பங்குகொண்டனர்.

இந்த நிகழ்வில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

✦ பாதுகாப்பான படகுச் சேவையை ஏற்பாடு செய்தல்.

✦ சுகாதார வசதிகளை ஏற்படுத்தி சுகாதாரம் பேணல்.

✦ படகுப் போக்குவரத்தின் போது உயிர்காப்பு உபகரணங்களைக் கையாளுதல்.

✦ படகுகளை உரிய இடங்களில் தரிக்க ஏற்பாடு செய்தல்.

உற்சவ ஏற்பாடுகள் தொடர்பான மற்றுமொரு கூட்டம் நாளைமறுதினம் 26ஆம்திகதி வியாழக்கிழமை நயினாதீவில் நடைபெறவுள்ளது. இதில் தீவுப்பகுதியைச் சேர்ந்த பிரதேச செயலர்கள் கலந்துகொள்வர்.

அதன் பின்னர் இறுதி ஏற்பாடுகள் பற்றிய மீளாய்வுக் கூட்டம் அடுத்த மாதம் 2 ஆம் திகதி யாழ். செயலகத்தில் நடைபெறும். (எ-203-204)

# வளர்ந்துவரும் எழுத்தாளர்களை ஊக்குவித்தவர் செம்பியன்செல்வன்

## தேசிய கலை இலக்கியப் பேரவை புகழாரம்

யாழ்ப்பாணம்,மே24

வளர்ந்துவரும் இளம் எழுத்தாளர்களை எழுத்துத்துறையில் ஊக்குவித்தவர் செம்பியன்செல்வன்.

- இவ்வாறு புகழாரம் சூட்டியுள்ளது தேசிய கலை இலக்கியப் பேரவை.

செம்பியன்செல்வனின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் மேற்படி பேரவை விடுத்த செய்திக் குறிப்பு வருமாறு:-

ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரான செம்பியன்செல்வன் இளவயதிலேயே இலக்கியப் பணியில் ஈடுபாடு கொண்டு தனது வாழ்வின் இறுதிவரை ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு பங்களிப்பை நல்கி வந்தவர். சிறுகதை, நாவல், இலக்கிய சஞ்சிகை வெளியீடு எனப் பல்வேறு துறைகளிலும் பங்களித்த இவர், தேசிய இன விடுதலைக்கான இலக்கியத் தளத்தில் உறுதியாக கால்பதித்து நின்றார்.

ஈழத்தின் பல்வேறு இலக்கிய அமைப்புகளை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் தலைவராகச் செயற்பட்டு வந்த இவர், படைப்பாளிகள் இடையேயான கலந்துரையாடல்களை ஏற்படுத்துவதிலும் இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதிலும் முன்னின்றார்.

மாற்றுக்கருத்துக்களுக்கு மதிப்பளிப்பது, மனித நேயத்துடன் மனந்திறந்து பேசி உறவாடுவது இவரது நற்பண்புகளாக இருந்தன. நல்ல இலக்கியங்களைத் தேடிக் கற்பதுடன், அவற்றை மற்றவர்களும் கற்பதற்குத் தூண்டி ஊக்குவிக்கும் இயல்பையும் இவர் இறுதி வரை பேணிவந்தார்.

இத்தகைய ஓர் இலக்கிய நண்பரின் - மூத்த எழுத்தாளரின் இழப்பு ஈழத்து இலக்கிய உலகுக்குப் பெரும் இழப்பாகும். இவரது மறைவுக்குத் தேசிய கலை இலக்கியப் பேரவை தனது அஞ்சலியைச் செலுத்துவதுடன், அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அமைகிறது - என்றுள்ளது. (எ)

# துன்னாலை கொல்களத்தினால் மக்களுக்கு சிரமம் எனப் புகார்

செம்பியன்பற்று,மே24

வடமராட்சி துன்னாலை வேரகொண்டை சுடலைக்கு அருகிலுள்ள கொல்களத்தினால் அப்பகுதி மக்கள் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கொல்களத்தில் இருந்து கொட்டப்படும் கழிவுகளை எடுத்துச்செல்லும் நாய்கள் அப்பகுதியில் சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்தி வருகின்றன என்றும் -

இதனால், அப்பகுதியில் இயங்கும் பாடசாலையின் மாணவர்கள் உட்படப் பலரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்றும் கூறப்பட்டது.

வேரகொண்டை பொதுமயானத்தைப் பயன்படுத்தும் துன்னாலைப் பகுதி மக்களும் இத்தகைய சுகாதாரச் சீர்கேடு காரணமாகப் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் கொல்களத்தை மக்கள் நடமாட்டம் அற்ற பகுதிகளுக்கு மாற்றிப் பொதுமக்களுக்கு சிரமங்கள் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-36)

**நாளை**

*வைகாசி 11*
*புதன்கிழமை*
*25.05.2005*
*திதி : துதியை*
*முன்னிரவு 10.25 வரை*
*நட்சத்திரம் : கேட்டை*
*பிற்பகல் 02.32 வரை*
*சுபநேரம் : 04.22 - 05.52*
*ராகுகாலம்: 11.52 - 01.22*
*(யாவும் பழைய நேரப்படி)*

# அநாதரவாகத் திரிந்த யாழ்.சிறுவன் மாங்குளம் மாவட்ட நீதிமன்றில்

## பெற்றோரைத் தொடர்புகொள்ளுமாறு கோரிக்கை

கிளிநொச்சி,மே24

மாங்குளம் பகுதியில் அநாதரவான நிலையில் அலைந்து திரிந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் மாங்குளம் காவல்துறையினரால் மல்லாவி மாவட்ட நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சாந்தகுமார் ராஜ்குமார் என்ற 14 வயது மதிக்கத்தக்க சிறுவனே இவ்வாறு நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனக் காவல்துறையின் மாங்குளம் பணிமனை அறிவித்துள்ளது.



பொதுமக்கள் வழங்கிய தகவலைத் தொடர்ந்து மாங்குளம் காவல் பணிமனையினால் விசாரணை செய்யப்பட்ட மேற்படி சிறுவன் மல்லாவி நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றும் -

குறித்த சிறுவனின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் தாமதமின்றி மாங்குளம் காவல் பணிமனையுடன் தொடர்புகொள்ள வேண்டும் என்றும் -

காவல்துறையின் முல்லைத்தீவு மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

**உதயவாக்கு**

மனிதர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைக் காட்டுவது துன்பங்களே.
- கிரீஸ் பழமொழி.

உ
தில்லையம்பதியாள் துணை

சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

# வைகாசி மஹோற்சவ பெருவிழா

## இன்று தில்லையம்பதியில்

## பூங்காவனத் திருவிழா



முற்பகல் 11.00 மணிக்கு அபிஷேகம்
நண்பகல் மாகேஸ்வர பூசை (அன்னதானம்)
மாலை 6.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசை அதனை தொடர்ந்து அம்பாள் விசேடமாக மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் வீதி உலா வரும் காட்சியும் இடம்பெறும்.

**இரவு விசேட நிகழ்ச்சிகள்**

* மங்கள விளக்கேற்றல்
* தேவாரம்
* மங்கள இசை - நா. பிரசாத் குழுவினர்
* கௌரவிப்பு விழா
* பரிசளிப்பு விழா:- ம.கி.மு சங்க மத்திய கல்வி மேம்பாட்டு பேரவையால் நடத்தப்பட்ட சமயபாட போட்டி பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு.

## யாழ் ரமணனின் ராஜன்ஸ் இன்னிசை கானங்கள்

தில்லையம்பதி,
கோண்டாவில்.
24.05.2005

ஒலி: கண்ணா சவுண்ஸ் (திருநெல்வேலி)
ஒளி: தில்லையம்பதி திருக்கோயில்

இங்ஙனம்
தில்லையம்பதி
இந்து இளைஞர்கள்.


# சின்னஞ்சிறு விளம்பரங்கள்


### விற்பனைக்கு

JX என்ற ஆங்கில இலக்கம் உடைய நீல நிறம் உடைய புதிய ஓட்டோ விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 547, பருத்தித்துறை வீதி, நல்லூர். T.P. No:- 222 6638 (45773)

### காணி விற்பனைக்கு

சுன்னாகத்திலிருந்து புன்னாலைக்கட்டு வனுக்குச் செல்லும் வீதி முகப்புடன் சுன்னாகம் பட்டினசபை எல்லைக்கு அருகில் வெற்றுக்காணி 07 பரப்பு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0112 - 582516, 0777 642937. (45748)

சாவகச்சேரியில் இந்துக் கல்லூரியின் சுற்று வட்டத்தில், டச்சு வீதி மருதடிச் சந்தியில், வீடு கட்டக்கூடிய, தென்னைவளம் உள்ள காணி (5 2/3 பரப்பு) விற்பனைக்கு உள்ளது. தொடர்பு: S.கமலநாதன், கந்தசாமி கோயில் வீதி, சங்கத்தானை. 0777 676593. (45719)

### கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 11ஸ்ரீ XXXX இலக்க முடைய 'சொறலா E 50' கார் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு 0777 - 519440. (45761)

### வீடு விற்பனைக்கு

அச்சுவேலி, ஜோன்ராஜ வீதியில் 4 பரப்புக் காணியில் அமைந்த 3 படுக்கையறை, களஞ்சிய அறை, 2 வரவேற்பறை மற்றும் இணைந்த குளியலறையுடன் சகல வசதிகளும் உடைய வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு 077- 3028402, 0112 360963(சி/42985)

### நாய்க்குட்டி விற்பனை

அழகான காவலுக்குரிய Great Dane நாய் குட்டிகள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. க.தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (45625)

### தவறிவிட்டது

கடந்த மே 12ஆம் திகதி வியாழக்கிழமை வண்ணை சிவன் கோயிலுக்கும் மனோகராச் சந்திக்கும் இடையில் கற்கள் பதித்த இரட்டை வடச் சங்கிலியும் பதக்கமும் (பவுண்) சிவப்புப் பேர்சுடன் தவறிவிழுந்துவிட்டன. கண்டெடுத்தவர்கள் தாவடி, மானிப்பாய் வீதி, கிருஷ்ணா ஹாட்வெயார் என்ரப்பிறைசில் ஒப்படைத்து உதவவும். T.P.: 077 6589641 தகுந்த சன்மானம் வழங்கப்படும். (45756)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர் 1 பகிரா புறோயிலர் குஞ்சுகள் 25.05.2005 மாலை விநியோகிக்கப் படும். பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, றஞ்சித், 517, ஸ்ரான்லி றோட், தாரகை, முதலாம் கட்டை பருத்தித்துறை. P.ரவி, சாவகச்சேரி ஸ்ரீராம் பருத்தித்துறை பஸ்நிலையம், முன்பாக கௌரி ஸ்ரோர்ஸ், பிரதான வீதி, பண்டத்தரிப்பு. T.P. 222 3529, 222 2867. (45713)

### திருமண சேவை

சீதனம் இல்லாமல் திருமணம் செய்யாதிருப்பவர்கள், கொடுத்துச் செய்யக்கூடியவர்கள், வசதியில்லாது திருமணஞ் செய்யாதிருக்கும் பெண்களை மனம் விரும்பி ஏற்கும் ஆண்கள், எங்களிடம் வெளிநாட்டு ஜாதகங்கள் உள்ளன. புகைப்படம் ஜாதகத்துடன் நேரிலோ, தபால் மூலமோ தொடர்பு கொள்ளவும். ஸ்ரீ நாகபூசணி அம்மன் திருமணமாலை, இல.289 A, பட்டாணிச்சூர், மன்னார் றோட், வவுனியா, T.P.:024 4588410, 0776 630207. (45057)

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1979 ஆம் ஆண்டு பிறந்த, சுவாதி நட்சத்திரம், நான்காம் பாதம் உடைய, பிரான்ஸில் வதிவிட உரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த, அழகான, மெல்லிய மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றார்கள். தொடர்பு: 021 4591793. (45677)

### மணமகன் தேவை

இந்து 1983ஆம் ஆண்டு செவ்வாய் தோஷ மற்ற சதய நட்சத்திரம் உடைய படித்த, அழகான மணமகளுக்கு பொறியியலாளர், வைத்திய தொழில் பார்க்கும் சைவ போசனமுள்ள மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: விளம்பர இலக்கம் 2595. மே.பா உதயன். (45772)

### விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுது பார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்.போன்சொப்**
10, நவீனசந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி, (திறீஸ்டார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம். (சி 42495)


### சுயதொழில் ஆரம்பிக்க உதவி

சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபையினர் ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்பட்டு சாவகச்சேரி பகுதியில் தங்கியுள்ள மக்களுக்கு சுய தொழில்களை ஆரம்பிப்பதற்குத் தேவையான உதவிகளை வழங்கவுள்ளனர்.

நாளை சாவகச்சேரி, கச்சாய் வீதி புனித ரிகோரியார் தேவாலயத்தில் வைத்து அதற்கான பொருள்களை வழங்கவுள்ளனர்

மீன்பிடி வலைகள், கோழிவளர்ப்பு ஆகியவற்றுக்கான உதவிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (3-117)

### அபிவிருத்தி குறித்து கருத்தரங்கு

கிராமங்களில் அபிவிருத்தித் திட்டங்களை சரியான முறையில் மேற்கொள்வது தொடர்பான ஜி.ரி. இசற் நிறுவனத்தின் கருத்தரங்கு அண்மையில் வரணி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் பிரதேச கிராம அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகள், பலர் கலந்து கொண்டனர்.

இக் கருத்தரங்கிற்கு ஜி.ரி. இசற் யாழ். மாவட்ட இணைப்பாளர் திருமதி M. தர்சினி கலந்துகொண்டு நிறுவனங்கள் இத்திட்டத்தில் எத்தகைய பங்கு வகிக்க வேண்டும். என்ற விவரங்களை எடுத்துக் கூறிய துடன் பிரதிநிதிகளிடமும் ஆலோசனைகளை கேட்டறிந்தார். (3-170)

# மரண அறிவித்தல்கள்

## வீரகத்தி இராசரத்தினம் (கந்தசாமி)

(முன்னாள் இ.போ.ச. சாலைப் பரிசோதகர்)



மாதகலைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி இராசரத்தினம் (கந்தசாமி) அவர்கள் 22.05.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.05.2005) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(45768) (24-18-16-21)

## திருமதி சின்னத்தம்பி மகேஸ்வரி

(மகேஸ் அக்கா)



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி மகேஸ்வரி அவர்கள் 11-05-2005 புதன்கிழமை பிரான்ஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி (இருபாலை) அவர்களின் அன்பு மனைவியும் சின்னத்துரை - பாக்கியம், தம்பதிகளின் அன்பு மகளும் கதிரவேலு - பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் திருமதி சதானந்தன் பத்மராணி, சந்திரகுமாரன் (குமார் - பிரான்ஸ்), இந்திரகுமாரன் (இந்திரன் - பிரான்ஸ்), மகேந்திரகுமாரன் (மகேந்திரன் - லண்டன்), சசிக்குமாரன் (மயூரன் - கொழும்பு M.S. ரவல்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சதானந்தன் (சரஸ்வதி மில், கொக்குவில்), உமாதேவி (பிரான்ஸ்), துஸ்யந்தி (லண்டன்), தர்சிகா (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியும் ஈஸ்வரி, காலஞ்சென்ற ஞானம்மா, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கந்தையா (ஆசிரியர் - இருபாலை) சபாபதிப்பிள்ளை (பொலீஸ் உத்தியோகத்தர்) மற்றும் முருகேசபிள்ளை (M.S.ரவல்ஸ், கொழும்பு), காலஞ்சென்ற சேனாதி ராசா, வில்வராசா, சோதிமலர் ஆகியோரின் மைத்துனியும் தினேஷன், ரூபேஸன் (கனடா), கிருஷாயினி, திலக்ஷன், செந்தூரன், தனுஷன், அனி, றம்மியா, அலன் (பிரான்ஸ்), அஜேய் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23-05-2005) திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: முருகேசபிள்ளை M.S. ரவல்ஸ் (0112314339),
மருமகன் - (சதானந்தன் - சரஸ்வதி மில் 021 222 3105 கொக்குவில்),
மகன் - மயூரன் M.S. ரவல்ஸ் - கொழும்பு) 0777 875264.
குமார் (பிரான்ஸ் - 0033164669508),
மகே (லண்டன் 00442085795695).

உப்புமட ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு.

(45743)(21-18-16-26)

# மாணவர் எழுச்சி நாளையொட்டி கிளிநொச்சியில் வலைபந்தாட்டம்



ஆட்டத்தில் ஒரு கட்டம்

யாழ்ப்பாணம்,மே24

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு தமிழீழ மாணவர் அமைப்பும் கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகமும் இணைந்து கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் வலைபந்தாட்டப் போட்டிகளை நடத்தியுள்ளன.

போட்டிகளில் வெற்றிபெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

**15 வயதுப்பிரிவு**

கிளிநொச்சி மகாவித்தியாலயம், பளை றோ.க.வித்தியாலயம்.

**17 வயதுப்பிரிவு**

அக்கராயன் மகாவித்தியாலயம், கிளிநொச்சி மகாவித்தியாலயம்.

**19 வயதுப்பிரிவு**

வட்டக்கச்சி மகாவித்தியாலய அணி, கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி. (3-203)

## ஜொலிஸ்ரார் கிரிக்கெட் சுற்றுப் போட்டி:

# கிறாஸ் கொப்பர்ஸ், கொக்குவில் அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம்,மே24

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஈ.எஸ். பேரம்பலம் நிறுவன அனுசரணையுடன் நடத்தி வரும் ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்திற்காக அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக்கழக அணி, கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணி ஆகியன வெற்றிபெற்றுள்ளன.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ். சென்றல் விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றல் விளையாட்டுக்கழக அணி 26.4 ஓவர்களில் சகல விக்கெட்டினையும் இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றது.

ஈழமாறன் 26 ஓட்டங்களையும், தைன் 31 ஓட்டங்களையும், பாலகுமார் 11 ஓட்டங்களையும், டியூறன் 10 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பிரகலாதன் 6 ஓவர் பந்துவீசி 28 ஓட்டங்களினைக் கொடுத்து 3 விக்கெட்டினையும், மயூரன் 6 ஓவர் பந்துவீசி 26 ஓட்டங்களினைக் கொடுத்து 2 விக்கெட்டினையும் ராஜகாந், தனஞ்சேயன், சிறிதரன், தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிறாஸ் கொப்பர்ஸ் அணி 23.3 ஓவர்களில் 4 விக்கெட்டினை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பிரகலாதன் ஆட்டம் இழக்காமல் 26 ஓட்டங்களையும், எஸ்.மயூரன் 25 ஓட்டங்களையும், தனஞ்சேயன் 19 ஓட்டங்களையும், ஜீவசங்கர் 15 ஓட்டங்களையும் ரீ.மயூரன் 13 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

யசோதரன் 6 ஓவர் பந்துவீசி 23 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டினையும், சுரேஸ்ராஜ் 3 ஓவர் பந்துவீசி 18 ஓட்டங்களினைக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக்கழக அணி 6 விக்கெட்டினால் வெற்றிபெற்றது.

மாலை நடைபெற்ற மற்றோர் ஆட்டத்தில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்துக் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 24 ஓவர்களில் சகல விக்கெட்டினையும் இழந்து 156 ஓட்டங்களினைப் பெற்றுக்கொண்டது.

லையனஸ் 53 ஓட்டங்களினையும், வினோதன் 21 ஓட்டங்களினையும், ஐக்சன் 13 ஓட்டங்களினையும் தமது அணிக்காக பெற்றுக்கொடுத்தனர்.

உமாநாத் 6 ஓவர்கள் பந்துவீசி 20 ஓட்டங்களினைக் கொடுத்து 2 விக்கெட்டினையும், ஜெயறூபன் 3 ஓவர்கள் பந்துவீசி, 14 ஓட்டங்களினைக் கொடுத்து 2 விக்கெட்டினையும் பிரதீபன் 4 ஓவர் பந்துவீசி, 23 ஓட்டங்களினைக் கொடுத்து 2 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி 27.5 ஓவர்களில் 8 விக்கெட்டினை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது.

சசிதரன் 40 ஓட்டங்களினையும், உமாநாத் 26 ஓட்டங்களினையும் துஷ்யந்தன் ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களினையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

சுஜீவன் 5 ஓவர்கள் பந்துவீசி 31 ஓட்டங்களினைக் கொடுத்து 2 விக்கெட்டினையும், தேவராஜ் 6 ஓவர்கள் பந்துவீசி 20 ஓட்டங்களினைக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும், ஐக்சன் 5 ஓவர்கள் பந்துவீசி 39 ஓட்டங்களினைக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும், சுரேஸ் 4 ஓவர்கள் பந்துவீசி 11 ஓட்டங்களினைக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி 2 விக்கெட்டினால் வெற்றிபெற்றது. (3-190)

# கிரிக்கெட் மத்தியஸ்தர்களுக்கான முன்னோடி வகுப்புகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே24

யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கம், துடுப்பாட்ட மத்தியஸ்தர்களுக்கான ஆயத்த முன்னோடி வகுப்புகளை நடத்திவருகின்றது.

நடைபெறவிருக்கும் மத்தியஸ்தர் பரீட்சைக்கு மத்தியஸ்தர்களைத் தயார் செய்வதற்காக இந்த முன்னோடி வகுப்புகள் திங்கள், வியாழன் ஆகிய நாள்களில் மாலை 6.30 மணிக்கு கிரிக்கெட் அக்கடமியில் இடம்பெறுகின்றன.

இந்த வகுப்புகளை வி.கே.சண்முகலிங்கம், சண் தயாளன் ஆகியோர் நடத்தி வருகின்றனர். இந்த வகுப்புகளில் பங்குபற்றுபவர்கள் மட்டுமே மத்தியஸ்தர் பரீட்சைக்குத் தோற்றமுடியும் என்றும்-

மேலதிக விவரம் தேவைப்படுவோர் துடுப்பாட்டச் சங்கச் செயலாளருடன் தொடர்புகொள்ளலாம் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (3-190)

## முன்பள்ளிகளின் மெய்வன்மைப் போட்டிகள்

தென்மராட்சி,மே24

கொடிகாமம் மத்தி பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் நாளை புதன்கிழமை பி.ப.2 மணிக்கு நிலைய மைதானத்தில் நடைபெறும். கு.நடராசா தலைமையில் இப்போட்டிகள் நடைபெறும். (3-117)

★ ★ ★

தென்மராட்சி, மே24

கெற்பேலி சிவசக்தி முன்பள்ளி சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் நாளை புதன்கிழமை முன்பள்ளி மைதானத்தில் ச.ஏகாட்சரம் தலைமையில் நடைபெறும். போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் கலந்துகொள்வார். (3-117)

★ ★ ★

## விளையாட்டு

தென்மராட்சி,மே24

வரணி, இயற்றாலை கலைவாணி முன்பள்ளி சிறார்களின் மெய்வன்மைப்போட்டிகள் நாளை மறுதினம் 26 ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறும்.

முன்பள்ளி ஆசிரியை செல்வி கலைவாணி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் கலந்துகொள்வார். (3-117)

★ ★ ★

காரைநகர், மே24

காரைநகர் தங்கோடை முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு தங்கோடை நாகம்மாள் கோயில் முன்றிலில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் ந.பரமசிவம் கலந்துகொள்ளவுள்ளார். (3-73)

# கிளிநொச்சி வலய மெய்வன்மைப் போட்டி முடிவுகள்

கிளிநொச்சி,மே24

கிளிநொச்சி வலய பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

கீழ்ப்பிரிவு முடிவுகள் கடந்த 20ஆம் திகதி உதயனில் வெளியாகியிருந்தது.

17 வயது, 19 வயது (ஆண்கள்) முடிவுகள் நேற்று வெளியாகியிருந்தன.

எஞ்சிய முடிவுகள் வருமாறு:-

**15 வயதுப் பிரிவு**

**ஆண்கள்**

**உயரம் பாய்தல்** - எஸ்.ஹெசிக்குமார் - தருமபுரம் ம.வி., கு.மலரவன் - கிளிநொச்சி மத்திய கல்லூரி , எஸ்.செந்தூரன் - பூநகரி நல்லூர் ம.வி.

**முப்பாய்ச்சல்** - சி.பகீரதன் - பளை மத்திய கல்லூரி, ம.சுதர்சன் - தருமபுரம் ம.வி., எஸ்.ஹெசிக்குமார் - தருமபுரம் ம.வி.

**குண்டு தள்ளுதல்** - செ.செல்வறஜீபன் - தருமபுரம் ம.வி., கி.சதீஷன் - வேரவில் இந்து ம.வி., கு.மலரவன் - கிளிநொச்சி மத்திய கல்லூரி.

**தட்டெறிதல்** - செ.செல்வறஜீவன் - தருமபுரம் ம.வி., க.நிவாஸ் - அக்கராயன் ம.வி., கி.சதீசன் - வேரவில் இந்து ம.வி.

**ஈட்டி எறிதல்** - கி.சதீஷன் - வேரவில் இந்து ம.வி., த.தினேஸ்காந் - கிளிநொச்சி மத்திய கல்லூரி, ரா.ராஜ்குமார் - வேம்பொடுகேணி சீ.சீ.த.க.பா.

**4X100 மீற்றர் அஞ்சலோட்டம்** - கிளிநொச்சி ம.வி., திருவையாறு ம.வி., தருமபுரம் ம.வி.

**4X400 மீற்றர் அஞ்சலோட்டம்** - கிளிநொச்சி ம.வி., பூநகரி ம.வி., தருமபுரம் ம.வி.

**பெண்கள்**

**100 மீற்றர்** - இ.துவாரகா - அக்கராயன் ம.வி., வ.சுஜாதா - மாசார் அ.த.க.பா., பி.கனிஸ்ரிகா - பூநகரி ம.வி.

**200 மீற்றர்** - இ.துவாரகா - அக்கராயன் ம.வி., தி.கௌசல்யா - தருமபுரம் ம.வி., த.சுஜீதரா - பளை மத்திய கல்லூரி.

**400 மீற்றர்** - எஸ்.சுஜந்தா - பூநகரி ம.வி., கு.றஜிதா - கண்டாவளை ம.வி., இ.குகராஜனி - வட்டக்கச்சி ம.வி.

**800 மீற்றர்** - எஸ்.டினோஜா - செல்லியா தீவு அ.த.க.பா., சி.அருந்ததி - பூநகரி ம.வி., கு.றஜிதா - கண்டாவளை ம.வி.

**1500 மீற்றர்** - கு.றஜிதா - கண்டாவளை ம.வி., க.ஞானேஸ் - வேரவில் இந்து ம.வி., ச.சசிகலா - அக்கராயன் அ.த.க.பா.

**3000 மீற்றர்** - சி.அருந்ததி - பூநகரி ம.வி., க.ஞானேஸ் - வேரவில் இந்து ம.வி., இ.வினோதினி - கனகாம்பிகைக்குளம் அ.த.க.பா.

**நீளம் பாய்தல்** - இ.துவாரகா - அக்கராயன் ம.வி., வ.சுவிதா - கண்ணகையம்மன் வித்தி., எஸ்.றொசாந்தா - வேரவில் இந்து ம.வி.

**உயரம் பாய்தல்** - எஸ்.சதானா - பூநகரி ம.வி., இ.பபிதா - வட்டக்கச்சி ம.வி., எஸ்.நிரோஜினி - வேரவில் இந்து ம.வி.

**குண்டு தள்ளுதல்** - ச.செல்வகுமாரி - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, அ.ஜீவிதா - பளை மத்திய கல்லூரி , யோ.கமலினி - கண்ணகையம்மன் வித்தி.

**தட்டெறிதல்** - செல்வகுமாரி - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, சு.தனுஷா - சிவநகர் அ.த.க.பா., செ.ஜெனிற்றா - வேரவில் இந்து ம.வி.

**ஈட்டி எறிதல்** - செ.ஜெனிற்றா - வேரவில் இந்து ம.வி., இ.றஜீபனா - கிளிநொச்சி ம.வி., எஸ்.ராஜபூபதி - கண்டாவளை ம.வி.

**4X100 மீற்றர் அஞ்சலோட்டம்** - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, அக்கராயன் ம.வி., பூநகரி ம.வி.,

**4X400 மீற்றர் அஞ்சலோட்டம்** - பூநகரி ம.வி., அக்கராயன் அ.த.க.பா., கண்டாவளை ம.வி.

**21 வயதுப் பிரிவு**

**ஆண்கள்**

**100 மீற்றர்** - எஸ்.பிரபாகரன் - முழங்காவில் ம.வி., அ.இந்திரரூபன் - கிளிநொச்சி மத்திய கல்லூரி, எஸ்.ராஜ்குமார் - ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தி.

**200 மீற்றர்** - அ.இந்திரரூபன் - கிளிநொச்சி மத்திய கல்லூரி., எஸ்.பிரபாகரன் - முழங்காவில் ம.வி., ம.சசிகுகன் - தருமபுரம் ம.வி.,

**400 மீற்றர்** - கோபிநாத் - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, ச.சுகுணஜெனாத் - கண்டாவளை ம.வி., ஜெ.புண்ணியதாஸ்- வேரவில் இந்து ம.வி.

**800 மீற்றர்** - ந.சுஜீவ்காந் - அக்கராயன் ம.வி., க.அஜந்தன் - கனகபுரம் ம.வி., பூ.ராஜ்குமார் - ஸ்ரீ விக்னேஸ்வரா வித்.

**1500 மீற்றர்** - க.அஜந்தன் - கனகபுரம் ம.வி., ம.உதயதீபன் - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கு.யசிந்தன் - கண்டாவளை ம.வி.

**5000 மீற்றர்** - ந.சுஜீவ்காந் - அக்கராயன் ம.வி., க.அஜந்தன் - கனகபுரம் ம.வி., பா.சதீஸ்வரன் - பூநகரி ம.வி.

**நீளம் பாய்தல்** - த.இதயகாந் - பூநகரி நல்லூர் ம.வி., இ.போல்ராஜ் - கிளிநொச்சி ம.வி., செ.அஜித்குமார் - தருமபுரம் ம.வி.

**உயரம் பாய்தல்** - கு.கோபிநாத் - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, இ.போல்ராஜ் - கிளிநொச்சி ம.வி., ந.குயின்ரஸ் ராஜன் - முழங்காவில் ம.வி.

**முப்பாய்ச்சல்** - கோபிநாத் - கிளிநொச்சி இந்துக் கல்லூரி , த.இதயகாந் - பூநகரி நல்லூர் ம.வி., செ.அஜித்குமார் - தருமபுரம் ம.வி.,

**குண்டுதள்ளுதல்** - பா.அகிலன் - கிளிநொச்சி மத்திய கல்லூரி, சோ.தினேஸ்குமார் - இராமநாதபுரம் ம.வி., கு.குணரூபன் - வேரவில் இந்தும.வி.

**தட்டெறிதல்** - பா.அகிலன் - கிளிநொச்சி மத்திய கல்லூரி, சோ.தினேஸ்குமார் - இராமநாதபுரம் ம.வி., கு.குணரூபன் - வேரவில் இந்து ம.வி.

**ஈட்டி எறிதல்**- த.இதயகாந் - பூநகரி நல்லூர் ம.வி., அ.சதீஷன் - பிரமந்தனாறு ம.வி., கு.குணரூபன் - வேரவில் இந்து ம.வி.

**4X100 மீற்றர் அஞ்சலோட்டம்** - கிளிநொச்சி இந்துக் கல்லூரி , கிளிநொச்சி மத்திய கல்லூரி. பூநகரி நல்லூர் ம.வி.

**4X400 மீற்றர் அஞ்சலோட்டம்** -அக்கராயன் ம.வி. பூநகரி நல்லூர் ம.வி.

**பெண்கள்**

**100 மீற்றர்** - ஞா.கிறிஸ்ரீனா - கிளிநொச்சி ம.வி., சி.ரூபவதனி - பளை மத்திய கல்லூரி, எஸ்.மாலதி - பூநகரி நல்லூர் ம.வி.

**200 மீற்றர்** - எஸ்.மாலதி - பூநகரி நல்லூர் ம.வி., சி.ரூபவதனி - பளை மத்திய கல்லூரி , ஆ.சரஸ்வதி - கிளிநொச்சி ம.வி.

**400 மீற்றர்** - க.றஞ்சலா - அக்கராயன் ம.வி., சி.சிறிமிதுலா - இராமநாதபுரம் ம.வி., த.தர்ஷினி - முழங்காவில் ம.வி.

**800 மீற்றர்** - க.றஞ்சலா - அக்கராயன் ம.வி., வி.டிவினியா நிலுாஜினி - கிளிநொச்சி ம.வி., செ.ஜமுனா - வேரவில் இந்து ம.வி.

**1500 மீற்றர்** - க.றஞ்சலா - அக்கராயன் ம.வி., வி.டிவினியா நிலுாஜினி - கிளிநொச்சி ம.வி., யோ.காயத்திரி - பளை மத்திய கல்லூரி.

**3000 மீற்றர்** - வி.டி.வினியா நிலுாஜினி - கிளிநொச்சி ம.வி., பா.வாசுகி - உருத்திரபுரம் ம.வி., தெ.பிரதீபா - முழங்காவில் ம.வி.

**நீளம் பாய்தல்** - ஞா.கிறிஸ்ரீனா - கிளிநொச்சி ம.வி., மா.சாலினி - முருகானந்தா ம.வி., சி.மாலதி - பூநகரி நல்லூர் ம.வி.

**உயரம் பாய்தல்** - ஞா.கிறிஸ்ரீனா - கிளிநொச்சி ம.வி., சி.சிறிமிதுலா - இராமநாதபுரம் ம.வி., இ.கௌசிகா - பளை மத்திய கல்லூரி .

**குண்டு தள்ளுதல்** - கு.துஷ்யந்தினி - பரந்தன் இந்து ம.வி., தி.ஜெயராணி - புனிததிரேசா பெண்கள் கல்லூரி - பா.தயானி - கனகபுரம் ம.வி.

**தட்டெறிதல்** - தி.ஜெயராணி - புனித திரேசா பெண்கள் கல்லூரி, கு.துஷ்யந்தினி - பரந்தன் இந்து ம.வி., பா.தயானி - கனகபுரம் ம.வி.

**ஈட்டிஎறிதல்** - ச.சசிகலா - பளை மத்திய கல்லூரி, பா.தயானி - கனகபுரம் ம.வி., த.தவபாலினி - வேரவில் இந்து ம.வி.

**4X100 மீற்றர் அஞ்சலோட்டம்** -இராமநாதபுரம் ம.வி., பூநகரி நல்லூர் ம.வி., பளை மத்திய கல்லூரி.

**4X400 அஞ்சலோட்டம்** - இராமநாதபுரம் ம.வி., பளை மத்திய கல்லூரி, கிளிநொச்சி ம.வி. (3-405)

(முற்றும்)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (24.05.2005) கொழும்பு கம்பன் கழகத்தினால் நடத்தப்படும் கம்பன் விழாவில் யாழ் மக்களுக்கு அயராது வைத்திய சேவை ஆற்றிய மைக்காக கௌரவிக்கப்படும் யாழ் போதனாவைத்தியசாலை வைத்திய நிபுணர்

திருமதி

சின்னப்பிள்ளை நாகேந்திரன்

அம்மா அவர்கள் நீடு வாழ்ந்து மேலும் பல விருதுகள், கௌரவங்கள் பெற வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

**வனிக்கா மெடிக்கல் ஸ்தாபனத்தார்.**

(C/42973)(52-15-45)

## வகுப்பறை புனரமைப்பு

வலி.மேற்கு,மே24

சில்லாலை,சாந்தை சிற்றம்பலம் வித்தியாசாலையிலுள்ள வகுப்பறை மண்டபம் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. யாழ். அரச செயலகத்தின் மாவட்ட புனரமைப்பு, புனர்வாழ்வு பிரிவின் நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்தின் கீழ் இப்புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என வித்தியாசாலை அதிபர். கு.ஜெகதீசன் தெரிவித்தார்.

இதேவேளை -

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சிவநேசன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்த நிதியைக் கொண்டு அண்மையில் மற்றுமொரு வகுப்பறைக் கட்டடம் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.

(8-135)

## வேலைவாய்ப்பு வழிகாட்டல் கருத்தரங்கு

தென்மராட்சி,மே24

தென்மராட்சி பிரதேசத்தில் வேலைவாய்ப்பு இன்றி இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் இக்கருத்தரங்கின் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று வேலைவாய்ப்பின்றி இருக்கும் இளைஞர், யுவதிகள் இக்கருத்தரங்கில் கலந்துகொள்ள முடியும் என்றும் -

கருத்தரங்கில் கலந்துகொள்வதற்கான பதிவுகளை சாவகச்சேரி நவீன சந்தை விமலாஸ் வர்த்தக நிலையத்தில் மேற்கொள்ளலாம் என்றும் - லயன்ஸ் கழகத்தலைவர் லயன் செ.கா.நவரத்தினம் அறிவித்துள்ளார்.

(எ-117)

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 06 - 09 - 1957



இறைவன் அடியில் 27 - 05 - 2002

அமரர் ஆறுமுகம் சத்தியமூர்த்தி

(S.B. மினிபஸ் உரிமையாளர் - கரணவாய் தெற்கு)

திதி: 24-05-2005

ஆண்டுகள் மூன்று உருண்டோடிப்போய்விட்டன. ஐயா,
உங்கள் உடல் மட்டும்தான் எங்களை விட்டுப்பிரிந்தது
ஆனால், நீங்கள் கண்ணின் கண்மணிகளைப்போல் இந்தக்
கண்மணிகளோடு காற்றாய் மரமாய் ஒலியாய் ஒளியாய்
அருவமாய் உருவமாய் அருவுருவமாய் வாழ்ந்து கொண்டு
நேசத்தின் தந்தையாகப் பாசத்தின் கணவனாக வாழ்ந்தீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

வாரிவட்டம்,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

உங்கள் நினைவுடன் வாழும்:
**தாய், மனைவி, பிள்ளைகள்,**
**சகோதரன், உற்றார், உறவினர்கள்.**

(45694) (24-11-34)

வாடிக்கையாளர்களே...

உங்கள் இல்லங்களில் நிகழ்கின்ற
பிறந்தநாள், திருமணம், ருதுசாந்தி போன்ற
**மங்களகரமான நிகழ்ச்சிகளை -**
உங்கள் எண்ணம்போல் வண்ணமாக வடிவமைத்து
DIGITAL VIDEO PHOTO மூலம் அழகாகப்
படம்பிடித்துக்கொள்ள இன்றே நாடுங்கள்:

**மூர்த்தி ஸ்ரூடியோ அன் டிஜிரல் கலர் லாப்**

62/16, ஸ்ரான்லி வீதி, (பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை), யாழ்ப்பாணம்.0714-168476

யாழ். வீதி, மானிப்பாய். 021 - 222 2884

(C/42880)(53-34-16)

## குடிதண்ணீர் வழங்க உதவுமாறு கோரிக்கை

வலி.தென்மேற்கு,மே24

சில்லாலை, சாந்தை சிற்றம்பலம் வித்தியாசாலை மாணவர்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் பலத்த சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

வித்தியாசாலையின் சுற்றாடலில் உள்ள கிணறுகள் யாவும் உவா நீர்க் கிணறுகளாக இருந்து வருவதால் குடிதண்ணீரைப் பெறுவது கஷ்டமாக இருந்து வருவதாகவும்-

இவ்வித்தியாசாலை மாணவர்களின் நலன்கருதி குடிதண்ணீரை விநியோகம் செய்வதற்கு ஆவனசெய்யுமாறும் வித்தியாசாலை அதிபர் வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலரிடம் கடித மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(எ-135)

## ஆத்மசாந்தி அழைப்பு

மலர்வு 18 - 06 - 1945



உதிர்வு 25 - 04 - 2005

அளவெட்டியைச் சேர்ந்தவரான

**அமரர் பொன்னுத்துரை மகாலிங்கம்**

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நாளை (25-05-2005) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. ஆகவே, இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறுகின்ற மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அளவெட்டி மத்தி,
அளவெட்டி.

**- குடும்பத்தினர்.**

☞ இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம். (45757)(26-11-34-24)

## ஓராண்டு நினைவலைகள்



தோற்றம் : 24.01.1922 தோற்றம் : 09.06.1924

மறைவு : 03.06.2004 மறைவு : 17.04.2004

மு.நாகலிங்கம் (J.P) நா. சின்னப்பிள்ளை

**பண்பின் சிகரங்களாய் பாசத்தின் திருவுருவங்களாய்**
**அன்பின் அணிகலங்களாய் வாழ்வாங்கு வாழ்ந்து,**
**நல் வழிகளைக் காட்டி எமை வாழ வைத்த தெய்வங்களே !**
**ஒன்றென்ன ஓராயிரம் ஆண்டுகள் மறைந்தாலும்**
**என்றும் எம் நெஞ்சங்களில் வாழும் உம் நினைவுகள்.**

நினைவுகளுடன்:

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

தம்பிராசா கமலநாயகி
குடும்பத்தினர்.

(45754)(51-14-17)

## வீதி புனரமைப்பு

வரணி,மே24

மந்துவில் மேற்கு சந்திரன் கேணி வீதி தற்சமயம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. 'நிக்கொட்' திட்டத்தின் நிதி உதவியுடன் இவ்வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது. புனரமைப்பு வேலைகளை மந்துவில் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் பொறுப்பேற்றுச் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த யுத்தகால கட்டத்தில் இவ்வீதி பாரிய அளவில் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(8-170)




LG Digitally yours

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans

141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766

(C/42876)

# கோவா வளரும் பருவத்தில் ஏற்படும் நோய்த் தாக்கம் விளைச்சலைக் குறைக்கும்

இலங்கையைப் பொறுத்தவரையில் கோவாப் பயிர்ச்செய்கையானது ஆண்டுமுழுவதும் பாரியளவில் மலைநாட்டுப் பகுதியில் பயிர் செய்யப்பட்டு வருகின்றது. மற்றைய மரக்கறிகளைப் போலல்லாது அதிகளவு பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததும் இலகுவாக வளரக் கூடியதும் அத்துடன், மக்கள் தங்களுடைய வீட்டுத்தோட்டத்திலும் வளர்க்கக் கூடியதாகவும் இது காணப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் கோவா செய்கை பெரும்போகத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. ஏனெனில், கோவாவின் வளர்ச்சிக்குச் சாதகமான காலநிலை இக்காலப் பகுதியிலேயே நிலவுகின்றது. வளரும் பருவத்தில் கோவாவில் ஏற்படும் நோய்த்தாக்கம் விளைச்சல் குறைவிற்கு இட்டுச்செல்கின்றது. கோவாவில் எவ்வகையான தாக்கங்கள் ஏற்படுகின்றது எனப் பார்ப்போம்.

### கோவா இலைகளில் கபிலப்புள்ளிகள் தோன்றுதல்

இது ஒருவகைப் பங்கசுவினால் ஏற்படுத்தப்படுகின்றது. இதனைக் கட்டுப்படுத்துவற்கு வீரியமான நோய்த்தாக்கமற்ற நாற்றுக்களை நடுதல்.

பொருத்தமான இடைவெளியில் தாவரங்களை நடுவதன்மூலம் தாவர அடர்த்தியைப் பேணுதல் (பொதுவான இடைவெளி 40x40 cm, 50x40cm).

தாவரத்திலிருந்து தொற்றுக்குள்ளான பகுதிகளை அகற்றுதல்.

பொருத்தமான நீர் முகாமைத்துவம் (தாவரம் முழுமையாக நிலையான வளர்ச்சியடையும் வரை ஒவ்வொருநாளும் நீர்பாய்ச்சுதல் வேண்டும். பின்னர் 2 கிழமைக்கு, ஒவ்வொரு 2 நாளுக்கு ஒரு முறையும் பின்னர் 4 நாள்களுக்கு ஒருமுறையும் நீர்பாய்ச்சுதல் வேண்டும். மழைவீழ்ச்சியையும் கருத்திற்கொள்ள வேண்டும்) Tebueonazole - பங்கசுநாசினியைப் பயன்படுத்தலாம். (0.35ml/l)




### கோவா இலைகளில் வெடிப்புகள் தோன்றுதல்

இவ்வகையான தன்மை அதிகளவு நீர் தாவரத்தினால் உள்ளெடுக்கப்படுவதனால் தோற்றுவிக்கப்படுகின்றது. இதனால் தலை (முட்டை)ப் பகுதி வெடிப்புக்குள்ளாகின்றது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு சிபாரிசு செய்யப்பட்ட இனவகைகளைப் பயன்படுத்தல், போதுமானளவு நீர் வழங்கல், தகுந்த நேரத்தில் அறுவடை செய்தல் போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.

### மஞ்சள் நிறமான கோவா தோன்றுதல்

வறண்ட மண்ணில் பயிரிடல், வளம் குறைவான மண்ணில் பயிரிடல் போன்றன இதற்குரிய காரணங்களாகக் காணப்படுகின்றது. இது ஒரு பங்கசு நோயாகும். **Fusarium oxusporum** எனப்படுகின்ற மண்வாழ் பங்கசுவினால் ஏற்படுத்தப்படுகின்றது.

இந்நோயில் கோவா இலைத் தொகுதிகள் மெல்லிய மஞ்சள் பச்சை நிறமாக மாறும். முதிர்ந்த இலைகள் கீழ்ப்புறமாக வளைந்து காணப்படுவதுடன், கபில நிறமாக மாறி ஈற்றில் உதிர்ந்துவிடும் தாவரம் அறுவடைக்குரிய காலத்தை அடையமுதலே இறந்துவிடும்.

இத்தாக்கத்தைத் தகுந்த நீர் முகாமைத்துவம், மண்பரிசோதனைமூலம் தகுந்த பசளைப் பிரயோகம், பயிர்களை மாறிமாறிப் பயிரிடுதல் மூலம் கட்டுப்படுத்தலாம்.

**Formasalforare** பங்கசு நாசினியையும் பயன்படுத்தலாம்.

### இலைகளின் விளிம்புப் பகுதியில் 'V' வடிவ காயங்கள் தோன்றுதல்

இது **Xanthomonas campestris** எனப்படுகின்ற ஒரு வகை பற்றீரியாவினால் ஏற்படுத்தப்படுகின்றது.

இலைகளின் விளிம்புப் பகுதி வழியாக வெளிறியிருத்தல் பின்னர் தாவரத்தின் பிரதான தண்டுப்பகுதியை நோக்கிப் பரவும்.

இலைகள் மஞ்சளாகி உலர்ந்து வாடிக் காணப்படும். ஈற்றில் உதிரும்.

**காந்தன் விவசாயபீடம்.**

இத்தாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு நோயற்ற வீரியமான நாற்றுக்களைப் பயன்படுத்தல். தகுந்த இடைவெளியில் பயிரிடல். தொற்றுக்குள்ளான தாவரப் பகுதிகளை அகற்றுதலும் சிறந்த நீர்முகாமைத்துவமும்.

### தலை (முட்டை)ப் பகுதி தோன்றுவது குறைவாயிருத்தல்

இதற்குரிய காரணங்களாக அதிகரித்த வெப்பநிலை, வறண்டமண், கூடுதலான தாவர அடர்த்தி, மண்ணின் வளம் குறைவாகக் காணப்படுதல்.

இதன் தீர்வுகளாகப் பொருத்தமான இடைவெளியில் (50cmx40cm) தாவரங்களை நடுவதன்மூலம் தாவர அடர்த்தியைப் பேணுதல், நீர் வழங்கலின் மூலம் மண்ணை ஈரலிப்பாக வைத்திருத்தல், மண் பரிசோதனை செய்வதனூடாகத் தகுந்த பசளையைப் பொருத்தமான அளவுகளில் பயன்படுத்தல்.

### கோவா இலைகளின் கீழ் விளிம்புப் பகுதியில் சாம்பல் நிறமான தன்மை தோன்றல்

இதற்கு ஒரு வகைப் பங்கசு காரணமாய் இருக்கின்றது. இதனைத் தடுப்பதற்கு அளவுக்கதிகமாக நீர்பாய்ச்சுதலைத் தடுத்தல். அத்துடன், வித்துக்களை நெருக்கமாக இடுதலையும் தவிர்த்தல் வேண்டும். **Tebuconazole** (0.35 ml/l) பங்கசு நாசினியையும் பயன்படுத்தலாம்.

### கபில நிறமான புள்ளிகளுடன் சுருண்ட வளைவுகளும் தோன்றுதல்

இதுவும் பங்கசுவினால் ஏற்படுத்தப்படுகின்றது. இதற்கு நோய்த்தாக்கமற்ற வீரியமான நாற்றுக்களைப் பொருத்தமான இடை வெளியில் நாட்டல், தொற்றுக்குள்ளான தாவரப்பகுதிகளை அகற்றுதல்.

### திரண்ட அல்லது பொருத்தமற்ற அமைப்பான பிரதான மற்றும் பக்கவேர்களின் வளர்ச்சி

இதற்கு **Plasmodiophora brassicae** என்னும் பங்கசு காரணமாயிருக்கின்றது. இத்தாக்கத்தினைக் குறைப்பதற்கு நோய்த்தாக்கமற்ற வீரியமான நாற்றுக்களைப் பயன்படுத்தல், தொற்றுக்குள்ளான பகுதிகளை அகற்றுதல் தொடர்ச்சியாகக் கோவா குடும்பத்தைச் சார்நத பயிர்கள் பயிரிடுதலைத் தவிர்த்தல்.

எனவே, வளரும் கோவாவை உன்னிப்பாகக் கவனித்து உருவாகும் நோய்களுக்கு உடனடியாகப் பரிகாரம் தேடுவதன்மூலம் அதிகளவு விளைச்சலைப் பெற்று இலாபத்தைப் பெருக்குவோமாக.

*

# திருமலையில் இயல்பு நிலையைத் தோற்றுவிக்க அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்

## யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் கோரிக்கை

திருகோணமலையில் ஏற்பட்டிருக்கின்ற பதற்ற சூழலைத் தணித்து, அதன் இயல்பு நிலையை உருவாக்க ஸ்ரீலங்கா அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் கோரியுள்ளது. இதுவிடயமாக மேற்படி ஒன்றியம் விடுத்த அறிக்கை வருமாறு:-

திருமலையின் நகரப்பகுதியில் புத்தர் சிலையை வைத்ததனை முன்னிட்டு அங்கு ஏற்பட்ட குழப்பம் இன்னும் நிறைவடையவில்லை. இதனால், தமிழ்மக்கள் நாளுக்குநாள் சிங்களக் காடையர்களின் தாக்குதல்களுக்கு உள்ளாகி வருகின்றனர், அத்துடன், தமிழர்களின் சொத்துக்களும் நாசமாக்கப்பட்டு வருகின்றன. இதனைத் தடுப்பதற்கு உடனடியான நடவடிக்கையை ஸ்ரீலங்கா அரசு முன்னெடுக்கவேண்டும்.

திருகோணமலை தமிழர்களின் பூர்வீக மண் - தமிழர்கள் தனித்துவமான நிலையில் வாழ்ந்துவரும் நிலம். இதனைத் திட்டமிட்ட வகையில், தமிழர்களின் தனித்துவத்தினை இழக்க வைக்கவேண்டும். என்றும - அந்தப் பூர்வீகமான தமிழரின் தாயகத்தினைத் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் மூலம் சிங்களத்தினுடைய சின்னமான பௌத்த மதத்தினைப் பரப்புவதன் மூலமாகவும் சிங்களவர் தம்வசப் படுத்திக்கொள்ளமுடியும் என்ற நோக்கோடு, சிங்கள - பௌத்த பேரினவாத அரசின் ஆக்கிரமிப்புச் செயற்பாடாகவே திருகோணமலை நகரப் பகுதியில் புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

இது ஓர் ஆக்கிரமிப்பின் வடிவில்தான் தமிழர்களுடைய மண்ணை ஆக்கிரமிக்கத் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை, காலத்துக்குக்காலம் ஆட்சிப்பீடமேறிய சிங்களப் பேரினவாத அரசு மேற்கொண்டு வந்தது. எனவே, திருகோணமலையில் புத்தர் சிலை வைத்ததும் ஆக்கிரமிப்பின் தொடர்ச்சிதான். எனவே, உடனடியாகப் புத்தர் சிலையை அகற்றி சிங்களக் காடையர்களின் வெறியாட்டத்தினை நிறுத்தி, திருகோணமலை மக்களின் வாழ்வில் வழமையான நிலையை உருவாக்க உரிய நடவடிக்கையை ஸ்ரீலங்கா அரசு முன்னெடுக்க வேண்டும்.காடைத்தனங்களையும் மதரீதியான ஆக் கிரமிப்புப் படிவங்களையும் தமிழர்களாகிய நாம் இனியும் அனுமதிக் கப் போவதில்லை. எனவே, திருகோண மலையில் இயல்பு நிலை ஏற்படுத்தப்படாதுவிட்டால், வடக்கு - கிழக்கு தமிழ்பேசும் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு அரசிற்கு எதிரான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியநிலை உருவாகும் - என்று அதில் உள்ளது. (எ)

# தென்மராட்சி விபத்துகளில் சனியன்று மட்டும் ஐவர் படுகாயம்

தென்மராட்சி,மே24

தென்மராட்சிப் பிரதேசத்தில் வெவ்வேறு இடங்களில் கடந்த சனியன்று இடம்பெற்ற வீதிவிபத்துக்களில் சிக்கி ஐந்து பேர் படுகாயமடைந்தனர்.

சாவகச்சேரி மற்றும் நுணாவில் பகுதியில் ஓட்டோ - மோட்டோர் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் காயமடைந்தனர்.

சாவகச்சேரியைச் சேர்ந்த ரீ.தினேஸ் (வயது 21), பீ.தேவன் (வயது 20) ஆகியோரே இவ்வாறு காயமடைந்தவர்களாவர்.

இதேவேளை, ஏ-9 வீதியின் குறுக்கே ஓடிய சிறுமியைக் காப்பாற்றுவதற்காக ஓட்டோவை நிறுத்த முயன்றவேளை ஓட்டோ தடம்புரண்டதில் அதன் சாரதி காயமடைந்தார்.

சாவகச்சேரி சிவன்கோயிலடியைச் சேர்ந்த அ.சத்தியநாதன் (வயது 25) என்பவரே காயமடைந்தவராவார்.

மட்டுவில் பகுதியில் இடம்பெற்ற ஓட்டோ சைக்கிள் விபத்தில் பாடசாலை மாணவி படுகாயமடைந்தார்.

மட்டுவிலைச் சேர்ந்த சி.பிரியங்கா (வயது 10) என்ற மாணவியே காயமடைந்தவராவார்.

வேகமாகவந்த மோட்டார் சைக்கிளின் ரயர் வெடித்ததில் வேலிக்கதியாலுடன் தூக்கி வசப்பட்டதில் மோட்டார்ச் சைக்கிளோட்டி காயமடைந்தார்.

சங்கத்தானையைச் சேர்ந்த என்.சிவரூபன் (வயது 21) என்பவரே காயமடைந்தவராவார்-

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.(எ-117)

# நிவாரணம் பெறத் தகுதியான குடும்பவிவரம் அனுப்பிவைப்பு

தென்மராட்சி,மே24

கைதடிப் பிரதேசத்தில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்குவது தொடர்பான விவரங்களை தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் யாழ். அரச அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கடந்த 2002 பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதிக்கு முன்னர் கைதடிப் பிரதேசத்தில் மீளக குடியமர்ந்த குடும்பத் தலைவரை இழந்த குடும்பங்கள், யுத்தத்தினால் அங்கத்தவர் ஒருவர் அங்கவீனமான அல்லது மரணமான குடும்பங்கள் மற்றும் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்கள் ஆகியோரின் விவரங்களே இவ்வாறு அனுப்பப்பட்டுள்ளன.

இவ்விதம் பாதிக்கப்பட்ட மீளக் குடியமர்ந்து உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்ட ஆயிரத்து 295 குடும்பங்களின் விவரங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(எ-117)

# கோப்பாய் வடக்கில் வீதிகளின் நிலை படுமோசம்

கோப்பாய்,மே24

கோப்பாய் மத்தி மற்றும் கோப்பாய் வடக்குப் பகுதிகளிலுள்ள சூசையப்பர் வீதி, கிழவானை வீதி, சோனெழ வீதி ஆகியன கடந்த 40 வருடங்களிற்கு மேலாகச் செப்பனிடப்படாமலுள்ளன.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு முறைப்பாடுகள் தெரிவித்தும் இதுவரை உரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி வீதிகளைப் பயன்படுத்தியே இப்பகுதி விவசாயிகள், கல்வியியல் கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் தமது அன்றாட பயணத் தேவைகளைப் பூர்த்திசெய்து வருகின்றனர். (எ-72)



கலாபூசணம் செல்லையா மெற்றாஸ்மயிலின் அகவை அறுபதையொட்டி பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழக இல்லத்தில் அண்மையில் மரபுக்கலை இசைவிருந்து நடைபெற்றது. இந்த நிகழ்வில் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் ந.வன்னியசிங்கம் ஆகியோர் முறையே மெற்றாஸ்மயிலுக்கு பொன்னாடைபோர்த்துக் கௌரவிப்பதையும், சிற்பகலாஜோதி எ.வி.ஆனந்தன், மெற்றாஸ்மயிலின் அரசபாத்திரத்தைச் சித்திரிக்கும் சிலையை கலைஞரிடம் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

# கூட்டுறவுப் பயிற்சிபெறும் மாணவருக்கு புலமைப்பரிசில் திட்டம் அவசியம் தேவை

## திருமலை மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் தெரிவிப்பு

கொழும்புத்துறை,மே24

கூட்டுறவுத்துறையில் ஈடுபட்டு கூட்டுறவுப் பயிற்சி பெறும் மாணவர்களுக்குப் பொருத்தமான புலமைப் பரிசில் திட்டம் ஒன்றினை உருவாக்கி அதனை நடைமுறைப் படுத்த வேண்டுமென திருமலை மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் செ.தாமோதரம் ஆலோசனை வழங்கியுள்ளார்.

கூட்டுறவுப் பணியாளர்களுக்கான தராதரப் பத்திர உயர்பிரிவு பயிற்சிநெறியின் பாடத்திட்ட இறுதி மீளாய்வுச் செயலமர்வில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனக சபாபதி தலைமையில் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கூட்டுறவுப் பயிற்சியாளர்களுக்குப் புலமைப் பரிசில் திட்டத்தை நடைமுறைப்படுத்த பொதுத்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு எதிர்காலத்தில் அது செயற்படுத்தப்பட வேண்டும்.

கூட்டுறவுத்துறையில் ஏற்படுகின்ற மாற்றங்கள், வளர்ச்சி மற்றும் தகவல்கள் வடக்கு - கிழக்குக் கூட்டுறவாளர்களுக்குத் தெரியப்படுத்தும் வகையில் சஞ்சிகை - பத்திரிகை போன்றவற்றை வெளியிட மாகாணக் கூட்டுறவுப் பயிற்சி நிறுவனம் நடவடிக்கை எடுக்கவேண்டும் - எனக் கேட்டுக்கொண்டார்.

வடக்கு - கிழக்கு மாகாணக் கூட்டுறவுப் பயிற்சி நிறுவன அதிபர் சி.கோணேஸ்வரன் தமது உரையில்:-

மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிகளில் கற்பிக்கும் விரிவுரையாளர்களுக்கு ஒருவார கால வதிவிடப் பயிற்சிநெறி ஒன்றை மாகாணக் கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தில் நடத்தி ஊக்குவிக்கப்படவுள்ளனர் - என்றார். (எ-30)

## பண்டத்தரிப்பு இந்துவுக்கு கணனி கிடைக்கும்

வலி.தென்மேற்கு,மே24

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்குப் புதிய கணனி ஒன்றை அன்பளிப்புச் செய்வதற்கு தற்போது சுவிஸில் வசித்துவரும் கல்லூரியின் பழைய மாணவர் ஒருவர் முன வந்துள்ளார்.

கல்லூரியில் இதுவரை கணனி எதுவும் இல்லாமையால் இங்கு மாணவர்களுக்கான கணனிக் கல்வியை ஆரம்பிக்க முடியாதிருந்ததாகவும் -

மேற்படி பழைய மாணவர் புதிய கணனி ஒன்றைக் கல்லூரிக்கு அனுப்பிவைக்க முன்வந்துள்ளதாகவும் -

விரைவில் கணனி இங்கு எடுத்துவரப்படும் என்றும் -

கல்லூரி அதிபர் வி.கந்தசாமி இது பற்றித் தகவல் தருகையில் தெரிவித்தார். (எ-135)

## கட்டாக்காலி கால்நடைகளால் தொல்லை

வலி.தென்மேற்கு,மே24

சில்லாலை தெற்கு, சாந்தைப் பகுதியிலுள்ள வயல் காணிகளில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்து வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். விவசாயிகள் பயிரிட்ட சிறுதானியப் பயிர்களையும் மற்றும் சணல் போன்றவற்றையும் இக்கட்டாக்காலி கால்நடைகள் மேய்ந்து அழித்து வருவதாகவும், இதனை தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் சில்லாலை விவசாயிகள் சம்மேளனத்திடம் இப்பகுதி விவசாயிகள் முறையிட்டுள்ளனர். (8-135)

## விதேகானந்த சரஸ்வதி சுவாமிகள் யாழ்.வருகை

யாழ்ப்பாணம்,மே24



சென்னை சர்வேஸ்வர தியான நிலையத்தைச் சேர்ந்த சுவாமி சின்மயானந்தரின் சீடரான விதேகானந்த சரஸ்வதி சுவாமிகள் யாழ்ப்பாணம் வருகைதந்துள்ளார்.

திருநெல்வேலி ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடத்தின் அழைப்பை ஏற்று வருகை தந்துள்ள இவர், பாடசாலை மற்றும் ஆலயங்களில் ஆன்மீகச் சொற்பொழிவுகளை நிகழ்த்தவுள்ளார். (எ-204)

## தென்மராட்சி மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு நிதி

தென்மராட்சி,மே24

சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நோர்வே கிளையினர் வலயத்தில் உள்ள ஏனைய பாடசாலை மாணவர்களின் கல்வி நிலையைக் கருத்திற்கொண்டு செயற்றிட்டங்களை மேற்கொள்ளவுள்ளனர். வருடாவருடம் ஒரு பாடசாலையைத் தெரிவுசெய்து அதனை மேம்படுத்துவதற்கு செயற்றிட்டங்களை வகுத்துள்ளனர்.

இவ்வருடம் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் கற்றல், கற்பித்தல் தன்மையை மேம்படுத்த சகல வகுப்பறைகளுக்கும் மின்னிணைப்பு வழங்க நிதி உதவி வழங்கப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் கு.சிவானந்தம் தெரிவித்தார்.

வருடாவருடம் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு வழங்கும் நிதிக்கு மேலதிகமாக ஏனைய பாடசாலைகளின் கல்வி வளர்ச்சிக்கு நிதி வழங்க முன்வந்துள்ளதாகவும் - தெரிவித்தார். (எ-117)

## ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் இனிமேல் அவரவர் பாடசாலைகளிலேயே நடக்கும்

பாடசாலைமட்ட ஆசிரியர் விருத்திச் செயற்றிட்டத்தின்கீழ் ஆசிரியர்கள் கற்பிக்கின்ற பாடசாலைகளில் வைத்தே அவர்களுக்கான சேவைக காலப் பயிற்சி மற்றும் செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளன.

கல்வி வலயங்கள் தோறும் நிறுவப்பட்டுள்ள ஆசிரியர் நிலையங்கள் ஊடாக இது வரைகாலமும் வழங்கப்பட்டுவந்த சேவைக் காலப் பயிற்சிகள் செயலமர்வுகள் இனிமேல் கற்பிக்கின்ற பாடசாலைகள் மற்றும குடும்பப் பாடசலைகளை அடிப்படையாகக்கொண்டு நடைபெறவுள்ளன.

மேற்படி செயற்பாட்டினை நடைமுறைப்படுத்துவதற்கு ஆசிரியர் நிலையங்கள் ஒவ்வொன்றிற்கும் 2005ஆம் ஆண்டுக்கு மட்டும் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உலக வங்கியின் நிதி உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்திச் செயற்பாடுகளில் கலந்துகொள்ளும் ஆசிரியர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கொடுப்பனவும் உடனுக்குடன் வழங்கப்படவுள்ளது.

புதிய செயற்பாட்டினை உடனடியாகச் செயல்முறைபடுத்துவதற்கான ஏற்பாடுகள் கல்வி வலய ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.(எ-11)




உலகப் பிரசித்தி பெற்ற ஆன்மீக குரு
ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் ஜியின்
**வாழும் கலைப் பயிற்சி**
(பிராணாயாமம், பாஸ்திரிகா, சுதர்சன்கிரியா மூச்சுப்பயிற்சி உள்ளடங்கிய)
**இலவச அறிமுக உரை**
150 நாடுகளில் நடைபெறுகின்ற வாழும் கலைப் பயிற்சி பற்றிய இலவச அறிமுக உரை நிகழ்வு கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறுகின்றது.
இன்று (24.05.2005) செவ்வாய்க்கிழமை
வீரசிங்கம் அரங்கு, யாழ்ப்பாணம்.
மாலை 4.30 மணி (பு.நே.).
அன்பில் மலருங்கள் உங்களை உணருங்கள்
அனைவரும் வருக!
மேலும் விவரங்களுக்கு:-
வாழும் கலை அறநிறுவனம், யாழ்ப்பாணம் மையம்.
தொ.பே. 077 9059 549, 077 9059 544, 222 6048.
www.artofliving.org. (45721)


## நீங்காத நினைவில் எட்டாம் ஆண்டு

வையத்துள் அறிமுகம் 15 - 04 - 1970



தெய்வத்துள் சங்கமம் 23 - 05 - 1997

**அமரர் கனக சத்தியநேசன்**

(மாவட்ட வைத்தியசாலை வல்வெட்டித்துறை)
திதி: அபரபக்க பிரதமை (24-05-2005)

எட்டு ஆண்டுகள் எத்தனை இன்னல்கள்
பட்டிடும் துயரங்கள் பெருஞ்சுமை ஆனதில்லை
கேட்டிடும் அருமை மகளின் கேள்வியில் அப்பாவை
காட்டிட வழியின்றி கலங்குவதே வதையாகும்

"கலாஞ்சலி", அல்வாய். அன்பு மகள் விதுர்ஷா, மனைவி. (45771)


WESTERN UNION

✸ வெஸ்டன் யூனியன் மூலம் பணம் பெறும் வாடிக்கையாளர்களே விடுமுறை நாள்களில் எங்கே எங்கே பணத்தைப் பெறுவதென்று கவலைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள். உங்களுக்காகவே விடுமுறை நாள்களிலும் நாங்கள் சேவை செய்யக் காத்திருக்கிறோம்.
✸ மேலும் துரித பார்சல், கடிதசேவை உலகெங்கும் வழங்குகின்றோம்.
விரைவானது. பாதுகாப்பானது.
குமார் முகவர் தபால் நிலையம்
133/3, மின்சார நிலைய் வீதி,
யாழ்ப்பாணம். (பஸ் நிலையம் அருகில்)
T.P.: 222 3453.
நம்பகமானது. (45703)



யாழ்ப்பாணத்தில்!
அழகுக்கலை பயிற்சிகளும் சேவைகளும்
அழகுக்கலை பயிற்றுநரும்
நடனஆசிரியையும்
Moon Beauty care இயக்குநருமாகிய
திருமதி B. அகிலா
{ Dip. in Beauty Culture
Dip. in Dance
Visaratha in Karthak }
அவர்களிடம் பயிற்சிபெற விரும்புவோரும் அழகுசார் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்க விரும்புவோர் இம்மாதம் 26, 27, 28, 29ஆம் திகதிகளில் காலை 10 - 2.00 மணி வரை சந்திக்கலாம்.
இடம்: 92, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்.
(DCM Tution முன்)
மேலதிக விவரங்களுக்கு:
T.P.: 0777 570138. (45707)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 17 - 03 - 1936



உதிர்வு 25 - 05 - 2005

தாவளை, இயற்றாலை, கொடிகாமத்தைச் சேர்ந்த

**கதிர்காமு மயில்வாகனம்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது மனைவி, பிள்ளை களான சசிகரன் (யாழ் பல்கலைக்கழகம், சமுர்த்தி அ.உ., இயக்குநர் A2Z கணனி நிறுவனம்), அமிர்தரஞ்சினி (ஆசிரியை), விமலரஞ்சினி (அபிவிருத்தி உதவியாளர்) ஆகியோருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

(45764)(46-11-34-26) நண்பர்கள் - யாழ்.

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தர் தவக்கொழுந்து

அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்தர் தவக்கொழுந்து நேற்று (23-05-2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதர் கந்தர் (இளைப்பாறிய அதிபர், அராலி இந்துக் கல்லூரி) அவர்களின் பாரியாரும் சலோஜினா, சிவஸ்கந்தா, விபுலஸ்கந்தா, றமணஸ்கந்தா, தவஸ்கந்தா (தவசி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற மயில்வாகனம், சறோஜினிதேவி, வசந்தா, நிர்மலா, ராதா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற மயூரதன், அகல்யா - பிரபாகரன், சுகன் - பிறேமியா, நிரூபன், சசிகலா - ஆனந்தராஜா, சசிரேகா - சிவசுப்பிரமணியம், சசிதேவி - சுரேஷ்குமார், சசிதரன் - தீபனா, சசிப்பிரபா, சயந்தன், கீதா - முரளீதரன், பிரீதா, கீர்த்திஹா, பிரவீந், ராதவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நதீபன், லக்ஷிகா, மோகனதீபன், நிசாந்தன், டர்சிகா, ரேணுகா, தேவேஷ், துவாரகா, ரதன், கஜன், மகிமா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-05-2005) பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

74/7, கந்தர்மணியம் வீதி,
கொழும்புத்துறை. (45767)(26-11-34) தகவல்: தவஸ்கந்தா (தவசி).

## நெஞ்சகலா நினைவலைகள்

6ஆம் ஆண்டு

தோற்றம் 28 - 11 - 1917



மறைவு 09 - 04 - 1999

**அமரர் சாமிநாதன் அந்தோனிப்பிள்ளை**

11 ஆம் ஆண்டு

தோற்றம் 09 - 04 - 1915



மறைவு 24 - 05 - 1994

**திருமதி சிசிலியா அந்தோனிப்பிள்ளை**

"சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்தில் மறவாதீர்"
நித்திய இளைப்பாற்றிய ஆண்டவரே இன்றைக்கு
அளித்தருளும் முடிவில்லாத ஒளி ஒளிர்வதாக.

128, கொழும்புத்துறை,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். (45747) (24-11-34-26) - குடும்பத்தினர்.

முல்லைத்தீவு மாவட்ட மக்களின்

# பிறப்பு, இறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ்களை மத்திய பதிவகத்திலிருந்து பெறுவதற்கு ஏற்பாடு

முல்லைத்தீவு,மே24

முல்லைத்தீவு மாவட்ட மக்களின் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவுச் சான்றிதழ்களை கொழும்பு மத்திய பதிவகத்திலிருந்து பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் மேற்கொண்டுள்ளது.

இத்தகவலை முல்லைத்தீவு மாவட்ட மேலதிக பதிவாளர் என்சண்முகநாதன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக முல்லைத்தீவு மாவட்டப் பதிவாளர் அலுவலகம் முற்றாகச் சேதமடைந்தது. இதனால், அலுவலகத்திலிருந்த இறப்பு, பிறப்பு மற்றும் விவாகப் பதிவு ஆகியவற்றின் மூலப்புத்தகங்கள் முற்றாகச் சேதமடைந்ததுடன் பெருமளவானவை கடல் நீரினால் அள்ளிச்செல்லப்பட்டுவிட்டன.

இதன் காரணமாக அனர்த்தத்தால் தமது ஆவணங்களை இழந்தோர் புதிய சான்றிதழ்களைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கும்போது பதிவுப் புத்தகங்கள் இல்லாத காரணத்தினால் பதிவுச் சான்றிதழ்களை வழங்கமுடியாதுள்ளது.

இதனை நிவர்த்தி செய்யும் முகமாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வடக்கு - கிழக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர் ஆகியோர் மேற்கொண்ட தீவிர முயற்சியின் காரணமாக பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவுகளின் சான்றிதழ்களை கொழும்பு மத்திய பதிவகத்திலுள்ள மூலப்பதிவுப் புத்தகத்திலிருந்து பிரதியாக்கம் செய்து வழங்குவதற்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் முன்வந்துள்ளதுடன் அதற்கான பணிகளையும் துரிதகதியில் மேற்கொண்டு வருகின்றது என்றார்.

இதேவேளை, சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு மேற்படி தமது ஆவணங்களைத் தவறவிட்டோரில் தினமும் 150 இற்கு மேற்பட்டோர் தமது சான்றிதழ்களைப் பெறுவதற்கு விண்ணப்பப் படிவங்களை வழங்கிவருகின்றனர்.

அவர்களுடைய வேண்டுதல்களை ஏற்று பலத்த சிரமத்தின் மத்தியில் அவர்களுக்குரிய பிரதிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(8-410-353)

## 'ஹைஏஸ்' - மோ.சைக்கிள் விபத்தில் ஒருவர் மரணம்

புதுக்குடியிருப்பு,மே24

புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் கடந்த 20ஆம் திகதி மாலை 4 மணியளவில் நடந்த ஹைஏஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் பலியானார்.

பரந்தனில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் வீதியில் சென்று கொண்டிருந்த உழவு இயந்திரம் ஒன்றைக் கடந்து முன்செல்ல முற்பட்டபோது பின்னால் வந்த 'ஹைஏஸ்' வாகனம் மோட்டார் சைக்கிளில் மோதியது என்று தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தின்போது யாழ்ப்பாணம் அராலியைச் சேர்ந்த நடராசா சதீஸ்வரன் (வயது 19) என்பவரே படுகாயமடைந்து வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும் வழியில் மரணமடைந்தார்.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகளைப் புதுக்குடியிருப்புப் பிரதேச காவல் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.(8-353)

## ஐஸ்கிறீம் வான்களில் பாடல்களுக்குத் தடை

விசுவமடு,மே24

நடமாடும் ஐஸ்கிறீம் வியாபாரிகள் தங்கள் வாகனங்களில் ஒலிபெருக்கி மூலம் பாடல்களை இசைப்பதனை தமிழீழ காவல்துறையினர் முற்றாகத் தடைசெய்துள்ளனர்.

வாகனங்கள், சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றில் ஐஸ்கிறீம் வியாபாரம் செய்வோர் ஒலிபெருக்கி மூலம் பாடல்களைப் இசைத்து வியாபாரத்தில் ஈடுபடுகின்றார்கள்.

இதனால் வீதியில் வரும் ஏனைய வாகனங்களின் சத்தம் அவ்வியாபாரிகளுக்கும் அருகில் பயணம் செய்வோருக்கும் கேட்பதில்லை. இதனால் விபத்துள் பல ஏற்பட்டுள்ளன.

இதனைக் கருத்திற்கொண்டு ஐஸ்கிறீம் விற்பனை செய்யும் வாகனங்களில ஒலிபெருக்கி பாவிப்பது தடைசெய்யப்பட்டிருப்பதோடு, மீறுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் ப.சி.சிவகுமாரன் தெரிவித்தார்.

(8-402-202)

## துணுக்காய் பிரதேச விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

முல்லைத்தீவு.மே24

துணுக்காய் பிரதேச கமக்கார அமைப்புக்களின் உறுப்பினர்களுக்கான சங்கம நிகழ்வு ஒன்று கடந்த வியாழக்கிழமை துணுக்காய் பிரதேச அரசியல்துறை அலுவலகத்தில் இடம் பெற்றது.

துணுக்காய் பிரதேசத்தில் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் விவசாயம் தொடர்பான நடடிக்கைகளின் முன்னேற்றம் பற்றியும், விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் இச்சங்கம நிகழ்வில் ஆராயப்பட்டன.

இப்பிரதேசத்தில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை உடன் நிறைவு செய்ய வேண்டியதன் அவசியம் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப் பொறுப்பாளர் சின்னண்ணா, பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வவுனியா வடக்குப் பிரதேசப் பொறுப்பாளர் கலைவாணன் ஆகியோர் கலந்துகொண்ட இந்நிகழ்வில் துணுக்காய் பிரதேசத்தைச் சேர்ந்த கமக்கார அமைப்புக்களின் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

(து-410-353)

## வன்னிச் செய்திகள்

### ஜேர்மன் அதிகாரிகள் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகளுடன் பேச்சு

கிளிநொச்சி,மே24

ஜேர்மன் தூதரக அதிகாரிகளுக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழக அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று கடந்த 21ஆம் திகதி கிளிநொச்சி தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப் பணியகத்தில் நடைபெற்றது.

ஜேர்மன் நாட்டு நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டங்கள் தொடர்பாக அந்தநாட்டின் தூதுவராலயத்தை சேர்ந்த அதிகாரி ஜோர்க் ஸ்கீமிட்ற், ஜேர்மன் பொருளாதார கூட்டுறவு அமைச்சின் ஆசியாவிற்கான சிரேஷ்ட அதிகாரி சியலர் ஆகியோர் தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி, திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் ஆகியோருடன் கலந்துரையாடினர்.

இதேவேளை, ஜேர்மன் தூதரக அதிகாரிகள் தட்டுவன்கொட்டி, முல்லைத்தீவு, விசுவமடு ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் திட்டங்களையும் நேரில் பார்வையிட்டுள்ளனர்.

(8-204)

### மீட்டல் கருத்தரங்கு

கிளிநொச்சி,மே24

இவ்வாண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கான உயிரியல் பாட மீட்டல் கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(8-203)

## முல்லைத்தீவில் தொழில்நுட்பக் கல்லூரி திறந்துவைப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

உலக கனேடிய பல்கலைக்கழக சேவை நிறுவனம்(WUSC) மற்றும் எச்.ஐ.வி.ஒ.எஸ். ஆகிய நிறுவனங்களின் நிதியுதவியுடனும் தமிழீழ பொருண்மிய மதியுரையகத்தின் நடைமுறைப்படுத்தலுடனும் இக்கல்லூரி திறந்துவைக்கப்பட்டுள்ளது.

மீன்பிடிப் படகு, வெளியிணைப்பு இயந்திரவியல், மரவேலை ஆகியன இக்கல்லூரியில் பயிற்றுவிக்கப்பட ஏற்பாகியுள்ளன. இதுவரைக்கும் 300 இலிருந்து 400 வரையான விண்ணப்பங்களைத் தாம் பெற்றுள்ளதாகக் கனேடிய பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் வடமாகாணப் பிரதி வெளிக்களப் பணிப்பாளர் ஜெயராஜசிங்கம் தெரிவித்தார்.

முல்லைத்தீவுத் தொழில்நுட்பக் கல்லூரியின் தலைவர் கிருஷ்ணபிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஈகச்சுடரினை முல்லைத்தீவு மாவட்ட துணை அரசியல்துறை பொறுப்பாளர் செல்வம் ஏற்ற, தேசியக்கொடியினை முல்லைத்தீவு திட்டமிடல் பணியகத்தைச் சேர்ந்த ரஞ்சன் ஏற்றினார்.

மங்கள விளக்கினை பொருண்மிய மதியுரையகப் பணிப்பாளர் சுகுணனும் கனேடிய பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி டக் கிராகம், வைத்தியர் தர்மேந்திரா, பொறியிலாளர் ரஞ்சன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொழில்நுட்பக் கல்லூரிக்கான பெயர்ப்பலகையினை சிரான் பணிப்பாளர் இரேனியுஸ் செல்வின் திரைநீக்கம் செய்துவைத்தார். இரு புதிய கட்டடங்களுக்கான பெயர்ப்பலகையினை கனேடிய பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி டக் கிராகம் திறந்துவைத்தார்.

(8)




முல்லைத்தீவு தொழில்நுட்ப கல்லூரி திறப்பு விழாவில் உலகக் கனேடிய பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி டக் கிராகம் மங்கள விளக்கேற்றுவதையும் தொழில்நுட்பக் கல்லூரியின் பெயர்ப்பலகையை சிரான் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின் திரை நீக்கம் செய்வதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.

## தபாலகத்துக்கென அமைக்கப்பட்ட கட்டடம் இதுவரை திறக்கப்படவில்லை

ஒட்டுசுட்டான் மக்கள் பெரும் அவதி

ஒட்டுசுட்டான்,மே24

ஒட்டுசுட்டான் அஞ்சல் அலுவலகத்திற்கென மாங்குளம் பிரதான வீதியில் புதிதாகக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டுள்ள போதும் அது இதுவரை இயங்கத் தொடங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒட்டுசுட்டான் அஞ்சல் அலுவலகம் இதுவரை காலமும் தனியார் வீடொன்றில் இயங்கி வருகின்றது. மேற்படி அலுவலகத்திற்குப் பிரதான வீதியில் இருந்து நீண்டதூரம் நடந்து செல்லவேண்டும். இதனால் பணியாளர்களும் பொதுமக்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர் எனக் காரணம் காட்டியே மாங்குளம் பிரதான வீதியில் புதிய அஞ்சல் அலுவலகம் அமைக்கப்பட்டது.

இந்த அலுவலகம் அமைக்கப்பட்டு எட்டு மாதங்கள் கடந்த நிலையிலும் அதனைத் திறந்து இயங்கவைப்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லையெனப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, உரியவர்கள் இவ்விடயத்தில் கவனமெடுத்து மக்களின் நலனுக்கு உதவவேண்டுமென்று ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

(8-341-203)




## செம்மலைக் கிராம அபிவிருத்திக்கு 'நிக்கொட்' நிறுவனத்தால் நிதி ஒதுக்கீடு

அளம்பில்,மே24

கிராம சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த செம்மலை மற்றும் செம்மலை கிழக்குப் பகுதிகளைப் புனரமைக்க 'நிக்கொட்' நிறுவனம் ஒரு கோடியே பத்து லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய் துள்ளது.

வீதி, கிராமச் செயலகம் அமைத்தல், இளைஞர்களுக்கான சுயதொழில் பயிற்சிகள், பெண்களுக்கான தையல் பயிற்சி, கிராம சங்கங்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி, பொதுக் கிணறு, கடல்நீர் உட்புகாத அணை அமைத்தல் போன்ற வேலைத்திட்டங்களுக்காக இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது.

ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதியுடன், மனித பங்களிப்பையும் பெற்று இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என செம்மலைப் பகுதிக்கான கிராமசேவையாளர் வ.புஸ்பராஜா தெரிவித்தார்.

திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கையாக கிராம மக்களின் பங்களிப்புடன் கடந்த வாரம் கிராமச் செயலகம் கட்டுவதற்காகத் தெரிவுசெய்யப்பட்ட இடத்திலுள்ள தேவையற்ற மரங்கள் வெட்டி அகற்றப்பட்டதுடன், அப்பகுதியில் துப்புரவுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-416)

# உள்ளூராட்சி தேர்தலின் போது புதிய தேர்தல்முறை அறிமுகம்?

கொழும்பு,மே24

தற்போது நடைமுறையிலுள்ள விகிதாசாரத் தேர்தல் முறை மற்றும் முன்னர் இருந்த தொகுதிவாரி தேர்தல் முறை ஆகியவை இணைந்த தேர்தல் முறையொன்றை எதிர்வரும் தேர்தல்களின்போது நடைமுறைப்படுத்துவது குறித்து அரசு ஆராய்ந்து வருவதாகச் சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அடுத்துவரும் 2006 ஆம் ஆண்டில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலின்போது புதிய தேர்தல் முறையை அரசு நடைமுறைப்படுத்தவுள்ளது.

புதிய தேர்தல் முறையொன்று அறிமுகப்படுத்தப்படுவது தொடர்பாக நியமனம் செய்யப்பட்டிருந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஆலோசனைகளுக்கமைய சகல அரசியல் கட்சிகளின் தலைவர்களும் இப்புதியமுறை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். இதனையடுத்தே அரசு இப்புதிய தேர்தல் முறையை நடை முறைப்படுத்தத் தீர்மானித்துள்ளது. இத்தகவல்களை அரசமைப்பு விவகாரம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு தொடர்பான அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

புதிய தேர்தல் முறை தொடர்பான பேச்சுகளைத் தமது அமைச்சு ஆரம்பித்துள்ளது என்றும் - வெகுவிரைவில் அது தொடர்பான சட்டமூலம் நடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவிருப்பதாகவும் - அவர் மேலும் தெரிவித்துள்ளார். - இவ்வாறு அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-206)


## வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்
## மணல் விநியோக அறிவித்தல்

இன்று (24-05-2005) செவ்வாய்க்கிழமை மணல் விநியோகம் நடைபெறமாட்டாது. செவ்வாய்க்கிழமை குறிப்பிடப்பட்டவர்களுக்குரிய மணல் விநியோகம் அடுத்தவாரம் செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

(சி-43014)(26-11-14) - நிர்வாகம்.


## ஓட்டோ கடத்தியவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

தென்மராட்சி,மே24

ஓட்டோவைக் கடத்திய நபரை மேலும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டார்.

சாவகச்சேரி வடக்குப் பகுதியில் வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவைக் கடத்திச் சென்று வடமராட்சிப் பகுதியில் விற்க முயன்றபோது பிடிக்கப்பட்ட ஒருவர் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டபோது கடந்த 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

மன்னார், உப்புக்குளத்தைச் சேர்ந்த அப்துல் அசீஸ் அக்மல் என்னும் இந்நபரைக் கடந்த வியாழனன்று நீதிமன்றில் ஆஜர்செய்தபோது அடுத்தமாதம் இரண்டாம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

ஓட்டோவை அதன் உரிமையாளர் சரசாலை வடக்கைச் சேர்ந்த விக்னேஸ்வரன் சுகீசனிடம் கையளிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ-117)

## வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே24

மானிப்பாய் றோட்டறக்ட் கழகம், நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்குப் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு நடத்திவருகின்றது.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அளவையியல் பாடத்திற்கான கருத்தரங்கு வட்டு. இந்துக் கல்லூரியிலும் - நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அளவையியல் பாடத்திற்கும் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இந்துநாகரிகம் பாடத்திற்கும் இணுவில் மத்திய கல்லூரியிலும் - கருத்தரங்கு நடைபெறும். (எ-202)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

சங்கானை,மே24

வலி.மேற்கு பிரதேச சபையின் உப அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின போது 40வரையான கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

பொது இடங்களில், குறிப்பாக மீன்சந்தை, பஸ்நிலையம் மற்றும் பிரதான வீதிகளில் காணப்பட்ட நாய்களே பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் உதவியுடன் பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. (8-29)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11 - 01 - 1981



மறைவு 24 - 05 - 1999

அமரர்

**இராஜகோபால் காங்கேசன் (கங்கு)**

(கொக்குவில் இந்துக் கல்லூரி A/L - 99 வர்த்தகப் பிரிவு மாணவன்

அருமை கங்கு நீ எங்கடா சென்றாய்...?
ஆறடா ஆண்டுகள் காணோம் உனையே...! -எம்
அருகிலே உன்னிடம் காலியாய் இருக்குதே....

காலன் கவர்ந்ததாய் சேதிகள் சொல்லுதே
பேதையெம் மனம் அதை ஏற்கவே மறுக்குதே - இங்கு
ஒருமுறை வந்துதான் உண்மையைச் சொல்லடா.....

தெருவழி பார்த்தெம் விழிகள் தேடுதே
கங்கேயுன் பாதம் பதிந்திட எம்நிலம் ஏங்குதே - வாராய்
நீ வருவாய் என்றெம் மனம் ஆறுதே..

29, சம்பியன் லேன்,
கொக்குவில். (சி-43013)(32-26-11-14) - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### குணரத்தினம் பொன்னம்மா



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் பொன்னம்மா அவர்கள் நேற்று (23.05.2005) திங்கட்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னாச்சி தம்பதிகளின் ஏக புதல்வியும் அமரர் குணரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், ராசா, செல்லத்துரை, பொன்னையா ஆகியோரின் அருமைச் சகோதரியும் குணதாசன் (ஓய்வுபெற்ற முன்னாள் ஊழியர், சிமெந்துக் கூட்டுத்தாபனம்), உதயகுமார் (லண்டன்), விஜயகுமார் (சுவிஸ்), அருந்ததி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரஜனி (உடுவில் அ.மி.த.க. பாடசாலை), சுதாமதி (லண்டன்), பூங்கொடி (சுவிஸ்), றங்கன் ஆகியோரின் மாமியாரும் றோகன், நிர்பன், சபரீஸ், லாவண்ஜா, ஆரண்யா, சாரண்யா, சாதனா, தர்சிகன், ஆர்த்திகா, செந்தூரன், பிரேமினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கம்சிகாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.05.2005) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னை பூபதி கலையரங்க முன் ஒழுங்கை,
உரும்பிராய்.

தகவல் :
குணதாசன்
(கிச்சான் - மகன்).

(45769)(32-11-14-26)


## வேலை ஆள் தேவை

வீடியோ, ஓடியோ நிறுவனம் ஒன்றுக்கு ஆண், பெண் விற்பனையாளர்களும், கணனித்துறையில் Photo shop அனுபவமுள்ளவர்களும், யாழ். நகரை அண்டிய பகுதிகளில் இருந்து உடன் தேவை.

31.05.2005 இற்கு முன்னர் சுய விவரக் கோவையுடன் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு விள. இல. 2596, மே/பா உதயன்.

(C/43007)(22-11-45-26)

## விற்பனைக்கு

வீடியோ நிலையமொன்றிற்கு ஏற்ற ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ்ப் படக்கொப்பிகள் மற்றும் தமிழ்ப்பட CDஇற்களும் மிகவும் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777 734339.
(சி-43009)

## SUBRA (14)

O/L Day Class

புதிய பிரிவுகள் — மின் ஒளியில்

01-06-2005
(புதன் மாலை 5.00)

- தினமும் மாலை 5 - 8.30 p.m.
- பாடத்திட்டம் பூர்த்திசெய்யப்படும்.
- அனுமதிகள் வரையறுக்கப்பட்டவை.
- எம்முடன் இணைந்தோர் வெற்றி பெறுவர்.

(சி-43012)

## திருமணக் கார்



(குளிரூட்டியது) வாடகைக்கு



★ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
★ விசேட வைபவங்கள் ★ சுற்றுலாக்கள்
போன்ற அனைத்துச் சேவைகளுக்கும்
புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட)
குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன்
நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன்
வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777 - 903090, 077-3086939, 0777-246117, 077-6018467. (43005)

தொடர்பு: நடேணன்,
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22,சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(26-11-14)

## SUBRA (14)
## மாபெரும் கருத்தரங்கு

| பாடம் | ஆசிரியர். | காலம் |
|---|---|---|
| இந்த நாகரிகம் | சிறிஸ் | 23/5 - 2p.m.- 4.30 p.m. |
| தமிழ் | காந்தன் | 24/5 - 8 a.m.- 11 a.m. |
| பொருளியல் | ஜெயகுமார் | 24/5 - 2 p.m. - 5 p.m. |
| அரசியல் | அசோக் | 24/5 - 8 a.m. - 11 a.m. |
| அளவையியல் | E.S.பவன் | 25/5 - 4p.m. - 7p.m. |
| வணிகக்கல்வி | நந்தீஸ் | 26/5 - 3 p.m. - 6 p.m. |
| கணக்கீடு | சுபேஸ் | 27/5 - 3.p.m. - 6 p.m. |
| நாடகம் | கணேஸ் | 28/5 - 4p.m. - 6p.m. |
| புவியியல் | ஐங்கரன் | 29/5 - 30/5 - 6p.m. - 8p.m. |

★ அனுமதிகள் வரையறுக்கப்பட்டவை
★ முழுமையான மீட்டலும் எதிர்பார்ப்பு வினாக்களும்

2007புதிய பிரிவுகள்
01/06/2005 (புதன் மாலை 4 மணி)

(சி-43011) 38-11-14 26)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 - 07 - 1930



மறைவு 24 - 05 - 2004

**திருமதி தனபாக்கியம் நவரத்தினசாமி**

ஓராண்டு சென்றாலும் ஓயவில்லை - எம் கண்ணீர்
உம் நினைவு மாறாத நெஞ்சங்களால்
மதி மயங்கி நிற்கின்றோம்.
ஆறாத்துயரில் நிற்கின்றோம் - அம்மா
அரவணைப் பார் யாரும் இன்றி - அம்மா
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். (45779)(26-11-14)

தங்கள் நினைவால் வாடும்:
கணவர், பிள்ளைகள்.


## வீடியோ படப்பிடிப்பாளர்களுக்கான அதிநவீன கிறபிக்ஸ் (Graphics) வெளியீடுகள்

Indian effects
Foreign effects
பத்திற்கும் மேற்பட்ட Effects & softwares

3 வது முறையாகஎமது புதிய வெளியீடுகள்
முற்றிலும் வித்தியாசமான Effects

Background DVD'S
Sindhamani
Bombay

ஒவ்வொரு மாதமும் கிறபிக்ஸ் வெளியீடுகளை பெறும் வாடிக்கையாளர்களுக்கு விசேட விலைக் கழிவு வழங்கப்படும்

Effects, DVD, software சம்பந்தமான முழு விளக்கமும், விளக்கம் அடங்கிய குறிப்புக்களும் தரப்படும்

மிகக் குறைந்த விலைகளில் கணனிகளும், கணனி உதிரிப்பாகங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

Computer Motherboards
Hard disk, Cleaning spray
DVD ROM, DVD Writers, CD ROM
CD Writers Computer casing, RAM,
VGA Card Keyboard, mouse, mouse pad

முகவர்கள் தேவை
விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
(யாழிலும் வன்னியிலும்)

தொடர்புகளுக்கு
44/3A மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம்.
0777917610

## செம்பியன்பற்று தேவாலய விழா

செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலயத்திருவிழா நாளை புதன்கிழமையும் மறுநாள் வியாழக்கிழமையும் யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் கலந்துகொள்ளும் யாத்திரிகர்களின் நன்மைகருதி வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்களும் தனியார் சிற்றூர்திகளும் விசேட சேவையில் ஈடுபட ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதாக செம்பியன்பற்றுப் பங்குததந்தை அறிவித்துள்ளார். (ஓ-202)

சூரியன் செல்லினம் 0777 882 893
support@sooriyansms.com
GPRS அவசியமில்லை
யாழ். மாவட்டத்தில் :
0777 222 409
0773 107 734
0776 176 523
ஒரு முறை செயற்படுத்தினால் போதுமானது
மென் பொருளுடன் செயற்படுத்த ரூ 450 மட்டுமே
பாவனை குறித்த இலவச வழிகாட்டல்கள் வழங்கப்படும்
செல்லினம் கைத் தொலைபேசிகளை மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 28 – 11 – 1949 |  | 24 – 04 – 2005 |

### திருமதி பாக்கியலட்சுமி சுப்பிரமணியம்

(கராஜ் வைரமுத்து)

24.04.2005 அன்று காலமான எமது அன்புத் தெய்வத் தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (24.05.2005) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நண்பகல் இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அழைப்புக்கிடைக்காதவர்கள் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கலந்துகொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

'அம்பிகை வாசா'
வதிரி, கரவெட்டி. (45782)(11-12-15-29) – குடும்பத்தினர்.

திருமணக்கார்

குளிரூட்டப்பட்ட நிசான் சனி திருமணத் தேவைகளிற்கு வாடகைக்கு உண்டு.
T.P.: 0777 283795 (C-42899)

## காணவில்லை

பொதுவெள்ளை நிறமுடைய 3 வயதான பசு மாடு ஒன்று 21.05.2005 சனிக்கிழமை முதல் கந்தர்மடப் பகுதியில் காணவில்லை. (மஞ்சள் கயிற்றிலான நாணயமும் கழுத்தில் வேட்டிக் கரையும் அணிந்த வைரவர் ஆலயத்திற்கு உரிய தான மாடு) கண்டவர்கள் கீழுள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும். நா.பாலசுப்பிரமணிய குருக்கள், இல.48, புகையிரதவீதி, கந்தர்மடம்.
T.P.: 0777 141657, 0779145821 (45785)

மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு.
சரத்குமார், அறிமுகம் ரமேஸ், பூஜா நடித்த
ஐத்தன்
காட்சி நேரம்: 10.30 a.m., 2.30.p.m., 6.30 p.m., 9.30 p.m.
(C/42294)

நாகமஸ் சினிமா சுன்னாகம்
50 ஆவது நாளை நோக்கி
ரஜனி, நயன் தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடித்த
காட்சிகள: 11.00, 3.00, 7.00 (பு.நே.)



ராஜா யாழ்ப்பாணம்.
அர்ஜுன் இருவேடம், லைலா, சாயாசிங், வடிவேல் நடித்த
ஜெய் சூர்யா (ரீகல்)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30. (பு.நே.)
26 முதல் புதிய வெளியீடு
லேடி சுப்பஸ்ரார் விஜயசாந்தி, சூர்யா ஆக்ஷன் படம்.

நாதன்ஸ் சினிமா குளிரூட்டப்பட்டது. ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
உங்கள் பிரகாஷ்ராஜ், நவதீப், தேசா ஜெயராம், ஸமிக்சா மற்றும் பலர் நடித்த
அமிர்தம் அழியமுதும் (ரீகல்)
கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

## அறநெறிப் பாடசாலை ஆண்டு விழா நிகழ்வு

ஊர்காவற்றுறை பருத்தியடைப்பு கதிரேசன் இந்து அறநெறிப் பாடசாலையின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழா இன்று காலை 10 மணிக்கு அறநெறிப் பாடசாலையின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் பகுதிகளுக்கான கலாசார உத்தியோகத்தர் இநித்தியானந்தன், பருத்தியடைப்பு கிராம அலுவலர் ம.றெ.ஜெயதரன் ஆகியோர் இந்த விழாவில் விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

இறுதிப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பரிசில் மற்றும் சான்றிதழ் வழங்கல் மாணவர்களது கலை நிகழ்வுகள் என்பன விசேட நிகழ்வுகளாக இடம்பெறும். (எ)

## சமய சந்நிதிகளில்

இளவாலை பத்தவத்தை புனித பிலிப்பு நேரியார் ஆலய வருடாந்த நவநாள் திருவிழா கடந்த 17 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நாளை புதன்கிழமை பிற்பகல் 6 மணிக்கு நற்கருணை சுற்றுப்பிரகாரம் நடைபெறும்.

மறுநாள் வியாழக்கிழமை காலை 7 மணிக்கு கூட்டுத்திருப்பலி பூசையும் அதனைத் தொடர்ந்து புனிதரின் திருச்சொரூபப் பவனியும் நடைபெறும். தினமும் மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் நவநாட் திருப்பலியும் மறையுரைகளும் இடம்பெற்று வருகின்றன. (த-204)

★ ★ ★

சண்டிலிப்பாய் கல்வளை வீதியில் உள்ள கண்ணன் ஆலயத்தின் விசாகப் பொங்கல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணியளவில் நடைபெறவுள்ளது. விசேடபூசைகளும் இடம்பெறவுள்ளன. (3-13)

★ ★ ★

சுழிபுரம் பறாளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 7மணி தொடக்கம் நவோத்தர சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. (28-203)

## மரண அறிவித்தல்

### திருமதி தனிநாயகம் பார்வதிப்பிள்ளை

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தனிநாயகம் பார்வதிப்பிள்ளை அவர்கள் நேற்று (23.05.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தனிநாயகத்தின் அன்பு மனைவியும் ஞானகரனின் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - யாழ்.மாவட்ட செயலகம்) அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - சேதுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் இணுவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் தர்ஷினியின் அன்பு மாமியாரும் சங்கவியின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா, வேலுப்பிள்ளை, நாகம்மா, தம்பாபிள்ளை மற்றும் பொன்னம்மா, தர்மலிங்கம், கதிரவேலு (கனடா) ஆகியோரின் சகோதரியும் இணுவிலைச் சேர்ந்த குமாரகுலசிங்கத்தின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2005) செவ்வாய்க்கிழமை நண்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஞானாகரன் - மகன்
T.P.: 0773151536

பிராமனோடை,
கோப்பாய் வடக்கு, கோப்பாய். (45786)(11-12-29)

# இலங்கைச் சட்டக் கல்லூரிக்கான நுழைவுப் பரீட்சை - 2005

**எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன.**

**நுழைவுப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான ஆகக் குறைந்த தகைமைகள்:**

★ க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் பழைய பாடத்திட்டமாயின் நான்கு பாடங்களிலும் சித்தி (4S) புதிய பாடத்திட்டமாயின் மூன்று பாடங்களிலும் சித்தியும் (3S)

அத்துடன்

★ க.பொ.த. சாதாரண பரீட்சையில் தமிழிலும் ஆங்கிலத்திலும் திறமைச் சித்தி (C) பெற்றிருத்தல் வேண்டும் (ஒரே அமர்வில் தேவையில்லை).

எதிர்வரும் 31 ஆம் திகதிவரை இலங்கைச் சட்டக் கல்லூரி அலுவலகத்தில் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதிக்கு முன்னதாக சட்டக் கல்லூரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவேண்டும்.


விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்வதற்கு Incorporated Council of Legal Education என்ற பெயரிற்கு அதனால் Hatton National Bank இன் Hulftsdorp கிளையில் பேணப்படும் 01–18041–01–1 என்ற இலக்கத்தையுடைய வங்கிக்கணக்கிற்கு ரூபா 750/= செலுத்தி அப்பற்றுச்சீட்டைச் சட்டக் கல்லூரி அலுவலகத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி கட்டணத்தை நாட்டின் எந்தவொரு Hatton National Bank கிளையிலும் செலுத்தலாம். வங்கிப் பற்றுச்சீட்டில் விண்ணப்பதாரியின் முதலெழுத்துடனான பெயரையும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும் குறிப்பிடவும்.

கொழும்பு செல்ல இயலாதவர்களின் நலன்கருதி அவர்களுக்கு மேற்படி விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுத் தருவதற்குச் சட்ட மாணவர் இந்து மகாசபை முன்வந்துள்ளது. இதுதொடர்பில் 0714167023 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

யாழ்ப்பாணத்திலிருந்து மேற்படி நுழைவுப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பவர்களின் நலன்கருதிச் சட்டமாணவர் இந்து மகாசபை பரீட்சை வழிகாட்டிக் கருத்தரங்குகளை நடத்துவதற்குஏற்பாடுகளைச்செய்துள்ளது. இதன்விவரம் பின்னர் அறிவிக்கப்படும். (45783)(14-15-12-29-38)

**சட்ட மாணவர் இந்து மகா சபை,**
**இலங்கைச் சட்டக் கல்லூரி.**





குடாநாட்டில் நிலைகொண்டுள்ள முப்படையினரும் பொலீஸாரும் இணைந்து நடத்தும் வெசாக் கொண்டாட்டம் நேற்று மாலை யாழ்.பொது விளையாட்டரங்கில் ஆரம்பமாகியது. அப்போது யாழ். அரச அதிபர் கே. கணேஷ் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் நிற்பதையும் முதல் படத்திலும் காட்சிப்படுத்தப்பட்ட வெசாக் அலங்காரங்களில் ஒன்றை இரண்டாவது படத்திலும் கோட்டையில் உள்ள பழைய தூக்குமேடையில் சர்வமத பதாகை வைக்கப்பட்டிருப்பதை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள்:பிரபா, கவி)

# அடையாளம் காணாத சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,மே24

அனலைதீவுக் கடற்கரையோரத்தில் சிதைவடைந்த நிலையில் கடந்த சனிக்கிழமை மீட்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ள சடலத்தை அடையாளம் காண உதவுமாறு ஊர்காவற்றுறைப் பொலீஸார் கேட்டுள்ளனர்.

சுமார் 5 அடி உயரமுடைய முழுக்கை சேட் அணிந்த நிலையிலுள்ள அச்சடலத்தின் கழுத்துக்கு மேற்பாகமும், கைகளும் சிதைந்து போயுள்ளன.

ஊர்காவற்றுறை நீதிமன்றத்தின் பணிப்பின் பேரில் யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ள இச்சடலத்தை இனங்காண உதவுமாறு ஊர்காவற்றுறைப் பொலீஸார் பொதுமக்களிடம் கோரியுள்ளனர். (ஒ-202)

## ஐரோப்பிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதர்கள் நாளை வருகின்றனர். ஏற்கனவே அயர்லாந்து, தென்னாபிரிக்க அரசுகளின் பிரதிநிதிகளான அந்நாடுகளின் தூதர்கள் வன்னிக்கு வந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

## தந்தையுடன் வீதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறை ஆத்தியடி கல்லூரி வீதியில் வர்த்தக நிலையம் ஒன்றை நடத்திவரும் சிறுவனின் தந்தை எஸ். சத்தியகுமார் தனது மகனான கிரிசாந்த் (வயது3) என்பவரை அழைத்துக்கொண்டு நேற்றுக் காலை வீதியோரமாக நடந்துசென்றுகொண்டிருந்தார். அச்சமயம் மோட்டார் சைக்கிள் ஒன்று படுவேகமாக வந்தது. சிறுவனை மோதித்தள்ளியவாறு நிற்காமல் சென்று மறைந்தது.

மோட்டார் சைக்கிளால் மோதுண்ட சிறுவன் தலை அடிபட தரையில் வீழ்ந்ததால் மயக்கமுற்றான். உடனடியாக அவன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டான். அப்போது அவர் உயிர் பிரிந்துவிட்டது.

இந்த விபத்துத் தொடர்பான தகவல் பருத்தித்துறை பொலீஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளுடன் தப்பிச் சென்றவரைப் பொலீஸார் தேடிவருகின்றனர். (ஜ-70-173)

## பி.பி.சி. வானொலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறுமதி வாய்ந்த இறுவட்டுக்களும் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன எனக் கூறப்பட்டது. இதனால் இந்த ஒலிபரப்புச் சேவை தடைப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

புலிகளின் ஆள்களின் கைவரிசை இது என்று அந்த ஒலிபரப்புச் சேவை சார்பில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

## மட்டு.கிரிமிச்சையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்திலேயே இப்படி ஒருவர் கொல்லப்பட்டு மற்றொருவர் படுகாயமுற்றுள்ளார் என இராணுவ வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஒ)

## இரவிரவாகக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகரை அண்டிய கிருஷ்ணபுரி, திருக்கடலூர் பகுதியை ஒட்டியே இக்குண்டுகள் வெடித்தன. குண்டு வெடிப்புகளால் யாரும் பாதிப்படையவில்லை. எனினும், பதற்றத்திலிருக்கும் நகரத்தில் நள்ளிரவுவேளையில் இக்குண்டு வெடிப்புக்கள் பெரும் பீதியைக் கிளப்பின.

இச்சம்பவங்கள் தொடர்பாக வடிவேல் பிரதீபன், தர்மலிங்கம் ரகுதரன், வசந்தகுமார் ஹம்ஸன், அமரதாஸா காண்டீபன், நந்தகோபால் பிரதீபன், மகாலிங்கம் நிரஞ்சன், வரதராஜன் தினேஷ்குமார் ஆகியோரே பொலீஸாரால் கைது செய்யப்பட்டுநீதிவான் மாணிக்கவாசகர் கணேஷராஜா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர். அவர்களை சரீரப் பிணையில் விடுவித்து உத்தரவு வழங்கினார் நீதிவான். (ஒ)

## மற்றுமொரு புத்தர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் நேற்றுமுன்தினம் இரவு முதல் அப்பகுதி சிங்கள மக்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவற்றுக்கு மத்தியில் நேற்றுக்காலை புத்த பிக்குகள் சிலருடன் சென்ற ஒரு குழுவினர் இரண்டரை அடி உயரமான புத்தர் சிலையொன்றை அங்கு ஸ்தாபித்தனர் எனக் கூறப்படுகின்றது.

திருகோணமலை பஸ் நிலையத்தில் வைக்கப்பட்ட புத்தர்சிலை விவகாரம் சர்ச்சைக்குள்ளாகி அப்பிரச்சினைக்கு எவ்விதமுடிவும்காணாமல் ஜனாதிபதிவரை இந்தவிடயம் சென்றுள்ள ஒரு நிலையில், நேற்றுக்காலை தமிழர்களை மேலும் கொதிப்படையச் செய்யும் வகையில் ஏகாம்பரம் வீதியில் புதிதாகப் புத்தர்சிலை நிறுவப்பட்டுள்ளது.

புத்தர்சிலை நிறுவப்பட்ட பகுதி சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசமாக இருந்த போதும், இப்படியான ஒரு பதற்றமான சூழ்நிலையில் இதுவரை காலமும் இல்லாத இடத்தில் புதிதாக ஒரு புத்தர் சிலையை நிறுவுவது தமிழ் மக்களை வேதனையடைய வைக்கும் செயல் என விசனம் தெரிவிக்கப்பட்டது. (க)

## தலதா கைதி காலமானார்

கண்டி தலதா மாளிகை தாக்குதலில் ஈடுபட்டவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிறைத் தண்டனை பெற்ற முத்துசாமிப் பிள்ளை தர்மலிங்கம் என்பவர் வெலிக்கடைச் சிறையில் நேற்றுமாலை காலமானார் என்று தெரிவிக்கப்பட்டது.

1997 ஆம்ஆண்டுபெப்ரவரி 25 ஆம் திகதி தலதா மாளிகை மீதான தாக்குதல் நடத்தப்பட்டது. இதுதொடர்பாக மேலும் இரு தமிழர்கள் வெலிக்கடையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)



வெசாக் பண்டிகையை முன்னிட்டு நெல்லியடிப் பொலீஸ் பொறுப்பதிகாரி எஸ்.தர்மதாச தலைமையில் பொலீஸார் பொதுமக்களுக்குகுளிர்பானம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

(படம்: கரவெட்டிச் செய்தியாளர்)

## பொதுக்கட்டமைப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுக்கட்டமைப்பிற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மற்றும் இதர செயற்பாடுகளை எதிர்வரும் 25ஆம் திகதிக்குப்பின்னர் (அதாவது நாளை முதல்) மேற்கொள்ளவுள்ளோம். சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று பெரும்பாலானவர்கள் கோரிக்கை விடுத்தாலும் அதற்கு முன்னர் இதன் அடிப்படைகளை நாம் அறிந்து கொள்ளவேண்டியதாக இருக்கிறது.

இந்தப் பொதுக்கட்டமைப்பிற்கு ஜனாதிபதி தலைமை தாங்கினால் நாம் அவருக்கெதிராக நீதிமன்றுக்குச் செல்லமுடியாது. ஏனெனில், ஜனாதிபதியின் செயற்பாட்டுக்கு எதிராக வழக்குத் தொடரமுடியாது என்கிறது அரசமைப்பு.

எனவே, பொதுக்கட்டமைப்பு யோசனைகளின் பிரதியைப் பெறுமாறு நாம் எமக்கு வேண்டப்பட்ட உறுப்பினர்களிடம் கோரியிருக்கிறோம். அது எமது கைகளுக்குக் கிடைக்கும்வரை நாம் பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக இதர நடவடிக்கைகளை எடுப்போம்.

- இவ்வாறு வண. எல்லே குணவன்ஸ தேரர் மேலும் கூறினார்.

எனினும், பொதுக்கட்டமைப்புத் தொடர்பான ஏற்பாடுகளில் அரசின் சமாதானச் செயலகம் ஈடுபட்டு வருவதாலும் -

அரசு - புலிகள் சமாதானச் செயலக மட்டத்திலேயே பொதுக்கட்டமைப்பு உடன்பாடு கைச்சாத்தாகலாம் என நம்பப்படுவதாலும் -

அரசின் சமாதானச் செயலகத்துக்கு எதிராக வழக்குத் தொடர்வது குறித்தும் ஆலோசிக்கப்படுவதாக மற்றொரு தகவல் தெரிவித்தது.

இதேவேளை -

பொதுக்கட்டமைப்பு ஒப்பந்த யோசனைகளின் நகல் பிரதியை, இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடும்வரை வேறு எவருக்கும் வழங்குவதில்லையென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்திருக்கிறார் எனத் தெரியவருகிறது.

முன்னதாக இந்த ஒப்பந்தத்தின் நகல் பிரதியொன்று தமக்கு வழங்கப்பட வேண்டுமென ஜே.வி.பி. கடந்தவார இறுதியில் கோரிக்கையொன்றை ஜனாதிபதியிடம் முன்வைத்திருந்தது. அதேசமயம் இந்தப் பொதுக்கட்டமைப்பின் உள்ளடக்கத்தைப் பகிரங்கப்படுத்துமாறு பல சிங்கள அடிப்படைவாத பௌத்த அமைப்புகளும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கத் தயாராகி வருகின்றன.

எவ்வாறான போதிலும், மேற்படி பொதுக் கட்டமைப்பு யோசனைக்கான ஒப்பந்தம் கைச் சாத்தாகும்வரை அதனைப் பகிரங்கப்படுத்த ஜனாதிபதி தயாராக இல்லையென்றே அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

## பாதுகாப்பு வலய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவர்கள். அவர்கள் பாதுகாப்பு வலயம் காரணமாக இடம்பெயர்ந்த போதும் தமது பிரதேசத்தை அண்டியே வாழ்கின்றார்கள். அவர்களைக் குடியிருப்பு என்ற பெயரில் வேறு ஒரு பிரதேசத்தில் குடியமர்த்துவதால் தொழில்களையும் பாரம்பரிய வாழ்க்கை முறையையும் மேற்கொள்வதிலும் பெரும் சிக்கல்கள் ஏற்படும்.

அத்தோடு, உயர் பாதுகாப்பு வலயத்தைக் கருத்திற்கொண்டு மக்களை வேறிடத்தில் குடியமர்த்தினால் ஏனைய பிரதேச மக்களையும் அவ்வாறே குடியமர்த்தும்படி இராணுவம் கருத்துக்கூறும்.

இத்தகைய காரணங்களால் அந்த மக்களை வேறிடத்தில் குடியமர்த்த முடியாதுள்ளது.

ஆயினும், உயர் பாதுகாப்பு வலயத்தைச் சேர்ந்த மக்களை அவர்களது பிரதேசங்களில் மீளக்குடியமர்த்துவது தொடர்பாக இராணுவ உயர் தரப்புடனும் ஜனாதிபதியுடனும் கலந்துரையாடி வருகிறேன் - என்றார். (ஒ-202-203)

## வீதிகளை அகல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயினும், இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை.

வீதி அகலமாக்குவதற்கும் புனரமைப்பதற்கும் வேண்டிய அளவிடும் பணியை ஆரம்பிக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குப் பணிப்புரை விடுத்துள்ளேன். அந்தப் பணிப்புரைக்கமைய அவர்களும் ஆரம்பக்கட்ட வேலைகளை முன்னெடுத்துள்ளார்கள்.

இந்த வீதி விஸ்தரிப்பு நடவடிக்கையின் இறுதிக்கட்ட முடிவை எடுப்பதற்கு அனைவரினதும் ஆலோசனைகளும் பெறப்படும். ஆலோசனைகளையும் கருத்துக்களையும் தெரிவிப்போர் எனக்கு நேரடியாகவே அனுப்பிவைக்கலாம்.

பொதுமக்களின் கருத்துகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அனைவரினதும் கருத்துக்களுக்கமையவே வீதி விஸ்தரிப்பு நடைபெறும் - என்றார். (ஒ-202-203)


## மரண அறிவித்தல்

### பிலிப் நிக்கலஸ்

(உரிமையாளர், செல்லம்ஸ் ஸ்ருடியோ)



யாழ்ப்பாணம், கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கத்தம்பி பிலிப் நிக்கலஸ் நேற்று (23.05.2005) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப் மாணிக்கத்தம்பி - அடைக்கலமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் லில்லிமலரின் அன்புக் கணவரும் மரியஸ்ரெலா (கனடா), மரியநிர்மலா -தெய்வேந்திரா (ஆசிரியை, யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம்),மரியறாஜினி (கனடா), ஜோய் ஜெயக்குமார் (படப்பிடிப்பாளர், வீரகேசரி), மரியசாந்தினி (நோர்வே), தயாளன், ராஜ்குமார் (பிரான்ஸ்), றொபேட், ரவீந்திரகுமார் (நோர்வே), மரியவதனி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தாசிசியஸ் (கனடா), காலஞ்சென்ற தெய்வேந்திரா, அலோசியஸ் (கனடா), வசந்தமலர் (சுருக்கெழுத்தாளர், வீரகேசரி), செபஸ்ரியாம்பிள்ளை (நோர்வே), ஸ்ரெலா (பிரான்ஸ்),பெஞ்த் (நோர்வே), பயஸ் (நோர்வே) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற பிலிப் பிரான்சிஸ், காலஞ்சென்ற மேரிறோஸ், மேரிதிரேஸா, பிலிப் அன்ரனிப்பிள்ளை (ஜேர்மனி), காலஞ்சென்ற பிலிப் மத்தியூஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெறால்ட், தர்சினி, D.M.R.லக்ஸ்மன் (பொறியியல்பீடம், மொறட்டுவப் பல்கலைக்கழகம்), புளோரன்ஸா சிந்துஜா, சீமோன், சுசானா, மரியானா, றொபின், றோகர், றோய், தமிழ்ச்செல்வன், தமிழ்வேந்தன், திரேசன், லில்லியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'மலரகம்'*
*வளன்புரம், கொழும்புத்துறை.*

(45789)(29-14-12-15)

தகவல்:
ஜோய் ஜெயக்குமார்(மகன்).



வீடியோ
படப்பிடிப்பாளர்களுக்கான
Graphics வெளியீடுகள்
மேலதிக தகவல்கள் பக்கம் 10 இல்.
(45787)(29-14-12-15)



## மரண அறிவித்தல்

### திருமதி கனகு தவமணி



ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகு தவமணி நேற்று (23.05.2005) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் கனகுவின் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், யாழ்.மாநகரசபை ) அன்பு மனைவியும் கிருஸ்ணகுமார் (ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, மட்டக்களப்பு), சற்குணவதி (மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை), சந்திரகுமார், புனிதகுமார் (சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கோப்பாய்) தளையகுமார் (கிரிமாறன்), கேமாவதி, சயிற்றன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2005) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் பிற்பகல் 12 மணிக்கு கொட்டைகாடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆலடி வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*

(45788)(29-14-12-15)

தகவல்:
க.புனிதகுமார் (மகன்).


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கல்விச் சுடர்

**Examination For Grade Five Students For Selection To School And For The Award of Bursaries - 2005**

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல. 08**

**வினாத்தாள் - 1** **நேரம் : 45 நிமிடங்கள்**

**✱ முதலாம், 2ஆம் வினாக்களில் தரப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடை எழுதுக.**


01. **காலைக் கதிரவன் வான் வரவே**
**கண்ணைத் திறந்து நான் விழித்து**
**கோல நகையைக் காட்டிடுவேன்**
**குளத்தின் அழகைக் கூட்டிடுவேன்.**


மேலுள்ள பாடல் சூரியனைப் பற்றியது என்றால் 'நான்' என்ற சொல்லைச் சுற்றி வட்டமிடுக. அவ்வாறன்றி தாமரை பற்றியது என்றால் 'குளத்தின்' என்ற சொல்லின் கீழ்க் கோடிடுக.

02. ***சீனி தின்றால் இனிக்கும்***
***மாங்காய் வாயிற் புளிக்கும்***
***மிளகாய் வாயில் உறைக்கும்***
***பாக்கு நாவில் கயரும்***
***உப்பு சுவைக்க உவர்க்கும்***

மேலுள்ள பாடல் வரிகள் நாக்கைப் பற்றியது என்றால் 'மிளகாய்' என்ற சொல்லின் கீழ்க் கோடிடுக. அவ்வாறன்றி பல்சுவை பற்றியது என்றால் 'உறைக்கும்' என்ற சொல்லைச் சுற்றி வட்டமிடுக.


**✱ 3ஆம், 4ஆம் வினாக்களில் நான்கு படங்களுள் ஒன்று ஏனைய மூன்று படங்களுடன் ஏதோ ஒரு வகையில் பொருத்தமற்றது. அதனைத் தெரிந்து அதன் இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

03.

(1) (2) (3) (4) (.....)

04.

(1) (2) (3) (4)

**✱ கீழ்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

05. கிருஷாந்த் சம அளவான நீரைக் கீழுள்ள பாத்திரங்களான 1இலும், 2இலும் ஊற்றினான்.


(1) (2) (3) (4)


பின்னர் பாத்திரம் 1இலுள்ள நீரைப் பாத்திரம் 3இலுள்ளும், பாத்திரம் 2இலுள்ள நீரைப் பாத்திரம் 4 இலுள்ளும் ஊற்றினான். அப்போது பாத்திரம் 3,4இன் நீர்மட்டத்தின் அளவு எவ்வாறு இருக்கும்.
(1) இரண்டிலும் நீர்மட்டம் சமமாக இருக்கும்.
(2) 3இன் மட்டம் 4இன் மட்டத்திலும் குறைவாக இருக்கும்.
(3) 4இன் மட்டம் 3இன் மட்டத்திலும் குறைவாக இருக்கும்.
(4) 3இன் மட்டம் 4இன் மட்டத்தைப்போல் இரு மடங்காய் இருக்கும்.

06. யானைக் கூட்டமொன்றில் உள்ள யானைகளின் துதிக்கைகள், வால்கள் என்பவற்றின் கூட்டுத் தொகையிலும் பார்க்க 10 கால்கள் கூடுதலாக இருந்தன. அங்குள்ள யானைகள் எத்தனை?
(1) 5 (2) 10 (3) 15 (4) 20

07. ஓர் ஆசிரியரிடம் எப்பொழுதும் காணப்படவேண்டியது.
(1) புத்தகம் (2) வெண்கட்டி (3) சிவப்புப்பேனை (4) நல்லொழுக்கம்


08. ஒரு சிறுவன் தரம் 5 புலமைப்பரிசல் பரீட்சை சித்தியடைந்து வெளிநாட்டுக்குச் சுற்றுலாப் பயணம் சென்றான். அவனது தாயார் கொழும்பில் வசித்தார். சிறுவன் அங்கு இருக்கும் இடத்தில் நண்பகலாயிருக்கும்போது தாய் வசிக்கும் இடத்தில் நேரம் அதேநாள் காலை 5 மணியாகும். ஒருநாள் காலை ஏழு மணிக்கு அச்சிறுவன் தன் தாயாருடன் தொலைபேசியில் உரையாடினான். அப்போது அவனது தாயாரின் வீட்டில் என்ன நேரமாயிருக்கும்?
(1) நண்பகல் (2) பி.ப.2.00 (3) பி.ப.5.00 (4) நள்ளிரவு

09. வெண்ணிலவன் கீழே உள்ளவாறு கோபுரத்தைக் குற்றிகளால் செய்தான். அதேகோலத்தைப் பின்பற்றும் இன்னொரு கோபுரத்தை அமைக்கிறார். அது ஆறு குற்றிகள் உயரமுள்ளது. புதிய கோபுரத்தில் எத்தனை குற்றிகள் இருக்கும்?



(1) 60 (2) 42 (3) 36 (4) 30

10. தரம் 5இல் படிக்கும் விசோபன் தளவாடிக்குள்ளே பார்த்தபோது இத் தெறிப்பைக் கண்டான்.



திருத்தமான நேரம் யாதாக இருக்கலாம்.
(1) 2.40 (2) 3.40 (3) 4.20 (4) 8.20

11. 'கைகொடுத்தல்' என்பது
(1) வரவேற்றல் (2) உதவிசெய்தல் (3) வழிகாட்டல்

12. 'கண் வளர்தல்' என்பது
(1) இறத்தல் (2) புத்தி உண்டாதல் (3) நித்திரைசெய்தல்

**கீழ்த் தரப்பட்ட பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

*தம்பி, தங்கையரே!*
**கிணற்றில் அல்லது ஆற்றில் இருந்து கொண்டு வந்த நீரை எப்போதும் கொதிக்கவைத்து ஆறிய பின் பருகவேண்டும். இல்லையேல் நோய்கள் பெருக வாய்ப்புள்ளது.**

*சுகாதாரப்பகுதி*

13. இந்த அறிவுறுத்தல் எதனூடாக வெளியிடப்பட்டிருக்கும்.
(1) வானொலிமூலம் (2) துண்டுப்பிரசுரம்மூலம் (3) உரையாடல்மூலம்

14. இந்த அறிவுறுத்தலை வழங்கியதன் நோக்கம்
(1) ஆசிகூறுதல் (2) குறைகூறுதல் (3) நல்வழி கூறுதல்

15. இந்த அறிவுறுத்தல் எதற்காக கூறப்பட்டிருக்கும்.
(1) கிணற்று நீர், ஆற்று நீர் என்பவற்றை நாம் கட்டாயம் பயன்படுத்தவேண்டும் என்பதற்காக.
(2) வெள்ளம் வருமுன் அணை கட்டவேண்டும்.அதேபோல நோய்கள் வருமுன் எம்மைப் பாதுகாக்கவேண்டும்.
(3) நீரின் பல்வேறு பயன்களை அறிந்துகொள்வதற்காக.

**கீழ்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

16. தாவரம் ஒன்றிற்கு மாத்திரம் உரிய இயல்பு எது?
(1) காற்றுக்கு அசைதல் (2) நிழல் தருதல் (3) காய்த்தல் (4) வளர்தல் ( )

17. மழைபெய்யும்போது நிச்சயமாக நடக்கக்கூடியது எது?
(1) இடி இடித்தல் (2) மின்னல் தோன்றுதல் (3) காற்று வீசுதல்
(4) நிலம் நனைதல் ( )

18. கண்ணுக்கு - காட்சிபோல காதுக்கு
(1) கேட்டல் (2) செவி (3) சத்தம் (4) தோடு ( )

19. வரதன் - பையன். அதுபோல நிமலா
(1) பெண் (2) சிநேகிதி (3) சிறுமி (4) பைத்தியக்காரி ( )

20. அழகு - மென்மை - இயற்கை ஆகிய மூன்று சொற்களுடனும் மிக நெருங்கிய தொடர்புடைய ஒரு சொல்
(1) மலர் (2) மரம் (3) சந்திரன் ( )

**கீழ்வரும் வினாக்களில் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

21. வீட்டிலிருந்து 2km தூரத்திலுள்ள கடைக்கு ஒரேசீரான வேகத்தில் சென்றுவருவதற்கு நேரம் 30 நிமிடங்கள் எடுக்கும் எனின் 6km தூரத்திலுள்ள தபால் நிலையத்திற்குப் போவதற்கு மட்டும் எவ்வளவு நேரம் எடுக்கும்?
(1) 90 நிமிடம் (2) 60 நிமிடம் (3) 45 நிமிடம் (4) 15 நிமிடம்

22. ஒரு பண்ணையிலுள்ள ஆடுகளினதும், கோழிகளினதும் எண்ணிக்கை 15ஆகும். அவற்றின் கால்களின் எண்ணிக்கை 48ஆகும். அப்பண்ணையிலுள்ள ஆடுகள் எத்தனை?
(1) 9 (2) 6 (3) 10 (4) 12


**கீழுள்ள ஒவ்வொரு வினாவிலும் மூன்று கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. முதலிரு கூற்றுக்களிலுள்ள தகவல்களின் அடிப்படையில் மூன்றாவது கூற்றை, ஊகிக்க முடியுமெனின் (✓) எனவும் முடியாது எனின் (✗) எனவும் அடைப்புக்குள் எழுதுக.**

23. Aயும் Bயும் தோசையை விரும்புகின்றனர்.
Bயும் Cயும் ஐஸ்கிறீமை விரும்புகின்றனர்.
ஆகவே Aயும் Cயும் ஐஸ்கிறீமை விரும்புகின்றனர். ( )

24. கமலும் நிமலும் சகோதரர்கள்.
நிமலும் விமலும் சகோதரர்கள்.
ஆகவே கமலும் விமலும் சகோதரர்கள். ( )

25. கமலா விமலாவின் மகளாவாள்.
விமலா அமலாவின் தாயாவாள்.
ஆகவே கமலாவும் அமலாவும் சகோதரிகளாவர். ( )

26. எண் கோலத்தில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்களை எழுதுக.




27.

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | 5 | 11 | 23 | |


**பின்வரும் பழமொழிகளுக்குப் பொருத்தமான கருத்தைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

28. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
(1) மூத்தோர் கூறும் வார்த்தைகளை இளையோர் கேட்பதில்லை.
(2) சிறு சுமைக்கு வளையாதவன் பெருஞ்சுமைக்கு வளைவானா?
(3) இளமையில் பழகாத நற்பழக்கங்களை வளர்ந்த பின்பு பழகுவது சாத்தியமாகாது.


29. சிறுதுளி பெரு வெள்ளம்.
(1) கொஞ்சம் கொஞ்சமாகச் சேமிப்பது பெருந் தொகையாகச் சேரும்.
(2) கொஞ்சம் கொஞ்சமாக செலவு செய்வதே இலாபத்தைத் தரும்.
(3) மழை பெய்யப் பெய்ய வெள்ளம் பெருகும்.

**சதுரமுகி வடிவமான மரக்கட்டைகள் 6 அடுக்கிவைக்கப்பட்டுள்ள இரண்டு முறைகள் 30ஆம் , 31ஆம் வினாக்களில் காட்டப்பட்டுள்ளன. அவற்றை அம்புக்குறி காட்டும் திசையிலிருந்து பார்க்கும்போது தோன்றும் உருவைத் தெரிந்து கீறிடுக.**

30.





31.





32. கீழுள்ள கணிதத் தொடர்பின் சரியான ஒழுங்கை 1, 2,3,4,5 என இலக்கமிடுக.
(1) இருபதை நான்கினால் பிரித்தார் ( )
(2) ஏழுடன் ஏழைக் கூட்டினார் ( )
(3) விடையை ஐந்தினால் பெருக்கினார் ( )
(4) மறுமொழி இருப்பத்தைந்தாகும் ( )
(5) பதினான்குடன் ஆறைக் கூட்டினார் ( )

33. நீர் நிரப்பப்பட்டுள்ள பாத்திரங்களைக் கொண்ட x, y, z ஆகிய மூன்று தொகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன.





இவற்றில் சம அளவு நீரைக் கொண்டுள்ள பாத்திரத் தொகுதிகள் எவை?
(1)xy (2) xz (3) yz

34. உருவின் கோலத்திற்கு '?' குறியினால் காட்டப்படும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.





**35 ஆம், 36ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உருக்கள் உள்ள மூன்று அடைப்புகள் தரப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்று அதில் உள்ள உருக்களுக்கு ஏற்ப, ஏனைய இரண்டிலிருந்தும் வேறுபடுகின்றது. அவ்வாறு வேறுபடும் அடைப்பினைத் தெரிவுசெய்து அதன்கீழ்கோடிடுக..**


35.




36.




குறிப்பிட்ட ஒரு நாளில் நான்கு வேளைகளில் ஐந்து பிள்ளைகளின் நிலைமைகள் கீழே உள்ள கோட்டுப் படங்களில் தரப்பட்டுள்ளன. இதனைக் கொண்டு 37 ஆம், 38 ஆம் வினாக்களுக்கு விடை தருக.





37. அந்நாளில் அதிக அளவில் மகிழ்ச்சியாக இருந்தவர் யார்?
(1)ராஜா (2)சமன் (3)லீலா

38. அந்நாளில் அதிக அளவில் கவலையாக இருந்தவர் யார்?
(1) ரூபன் (2)கமலா (3)லீலா


**39ஆம் 40ஆம் வினாக்களில் எண்கோலத்திற்கு ஏற்ப ? குறியுள்ள அடைப்புக்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவுசெய்க.**

39.




(1)3 (2)4 (3)5

40.




(1)1 (2)2 (3)3

**வினாத்தாள் 2** **நேரம்:1மணி15 நிமிடம்**

**பின்வரும் பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

அரசடி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
13.05.2005

செல்வன் ப. மேகலாதன்,

பிறந்த நாள் அழைப்பிதழ்

எனது மகன் கோகுலனின் 10ஆவது பிறந்தநாள் விழா 28.05.2005 அன்று சனிக்கிழமை பி.ப 5.00 மணிக்கு நடைபெறும். அவ்விழாவில் கலந்து கோகுலனை வாழ்த்துமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

நன்றி.

இப்படிக்கு
தங்கள் நல்வரவை நாடும்
ம. தர்மலிங்கம்

1. அழைப்பிதழில் விடுபட்ட பொருத்தமான குறியீடுகளை இடுக.
2. யாருடைய பிறந்த நாள் விழா நடைபெறுகின்றது? ..............................
3. விழா நடைபெறும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக?..............................
4. இந்த அழைப்பிதழ் யாருக்கு எழுதப்பட்டுள்ளது? ..............................
5. இந்த அழைப்பிதழை அனுப்பியவர் யார்? ..............................
6. பி.ப என்பதன் விரிவை எழுதுக. ..............................
7. இந்த அழைப்பிதழை இலங்கைக்குள் சாதாரண தபாலில் அனுப்ப வேண்டுமெனில் எவ்வளவு பெறுமதியான முத்திரையை ஒட்டுதல் வேண்டும்? ..............................
8. இந்த அழைப்பிதழை பதிவுத்தபாலில் அனுப்பவேண்டும் எனில் எவ்வளவு பெறுமதியான முத்திரை ஒட்டுதல் வேண்டும்? ..............................

**2. கீழே தரப்பட்ட விவரத்தினை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

திருகோணமலை, உவர்மலை இந்து ஆரம்பப் பாடசாலையில் தரம் 5இல் கல்விகற்கும் கோகுலன் என்னும் மாணவனுக்கு அவனது மாணவர் விடுதிக் கட்டணமாக 450 ரூபாவை செலுத்துவதற்காக இல.25, மத்திய வீதி, விருது நகரில் வசிக்கும் அவனது தகப்பனாராகிய திரு.ம.குணசிங்கம் என்பவர் அப் பணத்தொகையை காசுக்கட்டளை மூலம் அனுப்பிவைத்தார்.

1. மேற்படி பணத்தினை அனுப்பும்போது எங்கு காசுக்கட்டளைப்படிவத்தினைப் பூர்த்திசெய்து அனுப்பவேண்டும்? ..............................

✸ **திரு ம. குணசிங்கம் அவர்கள் பணத்தினை அனுப்புவதாக கருத்திற்கொண்டு கீழ் உள்ள காசுக்கட்டளைப் படிவத்தினை நிரப்புக.**

அ.த.சீ.
P.O.C.
(MS* S.T. &E.) 11/83

உள்நாட்டு சாதாரண காசுக்கட்டளை விண்ணப்பம்
APPLICATION FOR INLAND ORDINARY MONEY ORDER

2. தொகை AMOUNT ரூ. Rs. }...... ச. C. }...... இல. No. }......

3. ரூபா (சொல்லில்) Rupees (In Words) }..............................

4. பணம் கொடுபட வேண்டிய இடம் Payable at }..............................

5. பெறுபவரின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) Name of Recipient (With Initials) }..............................


6. அனுப்புபவரின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) Name of Remitter (With Initials) }..............................

7. அனுப்புபவரின் முகவரி Address of Remitter }..............................

8. திகதி Date }..............................

..............................
கையொப்பம் / Signature

**3. பின்வரும் உருக்களின் பெயரை எழுதுக.**

(1)  ..................

(2  ..................

**4. பின்வரும் பிராணிகளின் பெயர்களை எழுதுக.**

(1)  ..................

(2)  ..................


(3)  ..................


(4)  ..................

**5.** பின்வரும் தாவரப்படங்களின் பெயர்களை எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| தாமரை | சல்வீனியா | தாழை | அல்லி |

A 

B 

C 

D 

.................. .................. .................. ..................

**6.விலைப்பட்டியல் மூலம் விடை எழுதவும்.**

| விலைப்பட்டியல் | | ரூபா. சதம் |
|---|---|---|
| பயிற்சிப் புத்தகம் | 1 | 18 . 00 |
| அழிறப்பர் | 1 | 4 . 50 |
| பென்சில் | 1 | 12 . 75 |
| வரைதல் புத்தகம் | 1 | 18 . 50 |
| பேனா | 1 | 12 . 50 |
| நிறப்பென்சில் பெட்டி | 1 | 85 . 00 |

1. ஒரு பயிற்சிப்புத்தகம், ஓர் அழிறப்பர், ஒரு பென்சில் ஆகியவற்றை வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை? ............ ரூபா .............சதம்
2. பயிற்சிப் புத்தகமொன்று,வரைதல் புத்தகமொன்று, பேனா ஒன்று ஆகியவற்றை விலைக்கு வாங்கி ரூபா 200.00 செலுத்தினால் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு? .............ரூபா ..............சதம்
3. துமிலன் அழிறப்பர் ஒன்று, வரைதல் புத்தகம் ஒன்று,நிறப்பென்சில் பெட்டி ஒன்று ஆகியவற்றை விலைக்கு வாங்கினான். அவன் அதற்கான பணத்தை காசுத்தாளொன்று, மூன்று நாணயங்கள் மூலம் செலுத்தினான். அவை யாவை? ..............., ..............., ..............., ...............
4. சோபிதனிடம் 50 ரூபா உண்டு. 2 பயிற்சிப் புத்தகங்களும், ஒரு நிறப் பென்சில் பெட்டியும் வாங்குவதற்கு இன்னும் எவ்வளவு பணம் தேவை? ................ ரூபா ............... சதம்
5. பிரசாந்தன் மேலுள்ள பட்டியலில் உள்ள அனைத்திலும் ஒவ்வொன்று வீதம் விலைக்கு வாங்கி தம்பட்டமும், மத்தளமும் அடிப்பவர்களினது உருவங்கள் உள்ள காசுத்தாளைக் கொடுத்தால் அவனுக்கு கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு? ...............ரூபா ...............சதம்

**7. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பழுதடைந்த உணவின் மேல் பஞ்சு போலப்படர்வது? ......................
2. தானியங்களில் இருந்து கிடைக்கும் சத்து யாது? ......................
3. உடல் வளர்ச்சிக்கு அவசியமான சத்து எது? ......................
4. தோடம்பழத்தில் அதிகளவு உள்ள விற்றமின் எது? ......................
5. ''சிலோன் ப்ர்ட்விஸ்'' என்பது இலங்கைக்கே உரித்தான ஒரு பிராணி இனமாகும். அது எது? ......................
6. கடல் வாழ் முலையூட்டி எது? ......................
7. வாழைமரத்தின் வேர் எவ்வகை? ......................
8. மின்னேரியாக் குளத்தை கட்டுவித்தவன் யார்? ......................
9. இலங்கையில் அதிகமக்கள் பேசும் மொழி? ......................
10. மரங்களின் தண்டுகளில் ஒட்டி வளரும் தாவரம் ஒன்று எழுதுக. ......................

**8. இங்கு தரப்பட்ட சிங்கள எழுத்துக்களைப் பயன்படுத்தி கீழ் உள்ள தமிழ்ச் சொற்களுக்குரிய சிங்களச் சொல்லை எழுதுக.**

**ඉ ප ර පො ලී පා**

1.சூரியன் ............ 2. வீதி .................

**9. பின்வரும் சிங்களச் சொற்கள் குறிக்கும் தமிழ்ச்சொல்லை எழுதுக.**

1. ஒவ்......... 2.மல்லி.............

**10. பின்வரும் ஆங்கிலச் சொற்கள் குறிக்கும் தமிழ்க் கருத்தை எழுதுக.**

1. Good Morning ...................... 2. Happy birth day ..........................
3. How Many ...................... 4. River ....................

**11. பின்வரும் தமிழ்ச் சொற்களின் ஆங்கிலச் சொல்லை எழுதுக.**

1. வகுப்பறை ................. 2. அதிபர் .....................
3. நூலகம் .................. 4. வீடு .....................

**12. பின்வரும் நிறங்களை ஒன்றுடன் ஒன்று கலக்கும்போது உண்டாகும் புதிய நிறத்தின் பெயரை எழுதுக.**

1. சிவப்பு + மஞ்சள்= ...................................
2. நீலம் + மஞ்சள் = ...................................

**13. பின்வரும் பாடலைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

இரவைப் பகலாய் ஆக்கி நீயும்
இன்பம் தருகிறாய் - உலகில்
ஏற்றத் தாழ்வு பாராமலே
ஒளியைத் தருகிறாய்!

1. இப்பாடலில் எதனைப் பற்றி கூறப்பட்டுள்ளது? ......................
2. பாடலில் உள்ள முன்னிலைப் பெயர்ச்சொல் எது? ......................
3. 'தருகிறாய்' என்பதன் இறந்தகாலம் யாது? ......................


❋ ஒத்தகருத்துள்ள சொல் எழுதுக.

4. இரவு .................... 5. இன்பம் ......................

❋ எதிர்கருத்து எழுதுக.


6. ஒளியை ................. 7. நீ............


**14. பின்வரும் கணித பிரசினங்களுக்குரிய சரியான விடைகளை கணித்து எழுதுக.**

1. 


அருகே தரப்பட்டது நாடாவின் அளவிடைப் படமாகும்.

4மீற்றரைக்குறிப்பதற்கு 1 சென்ரி மீற்றரால் காட்டுமாறு படம் வரையப் பட்டுள்ளது. அந்நாடாவின் உண்மையான நீளம் யாது? ............. m

2. 
நிழற்றப்படாத பகுதியை விட நிழற்றப்பட்ட பகுதி எவ்வளவு குறைவானது என்பதை பின்னத்தில் எழுதுக. .........

3. 


A என்ற எழுத்தால் காட்டப்படும்; கோணத்தின் பெயர் யாது? .................

4. 
இதன் உச்சிகள் எத்தனை? .................
முகங்கள் எத்தனை? .................
விளிம்புகள் எத்தனை? .................

5. 


இக்கடிகார நேரத்தை சாதாரண நேரத்தில் எழுதுக. ............................

**15. பின்வரும் வீதிக்குறியீடுகளால் குறிப்பிடுவனவற்றை எழுதுக.**




.................. .................. .................. ..................

**16. கீழே காணப்படும் படத்தை அவதானித்து விடை எழுதுக.**




1. அப்பா நிற்பது அம்மாவுக்கு எத்திசையிலாகும்? ......................
2. அக்கா நிற்பது அம்மாவுக்கு எத்திசையிலாகும்? ......................
3. அம்மாவுக்கு கிழக்குத் திசையில் உள்ளது எது? ......................
4. நாய்க்கு எத்திசையில் அம்மா நிற்கிறாள்? ......................
5. அண்ணாவுக்கு எத்திசையில் மரம் அமைந்துள்ளது?......................
6. அம்மாவுக்கு எத்திசையில் சேவல் நிற்கிறது? ......................

**17. 'பரிசளிப்பு விழாவில் வகுப்பிற் சிறந்த மாணவனாக நான் தெரிவுசெய்யப்பட்டபோது.........' என்னும் தலைப்பில் சரியான எழுவாய், பயனிலைகளுடன் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒரு வாக்கியத்தில் நான்கு சொற்களுக்குக் குறையாமல் சொற்கள் இருத்தல் வேண்டும்.**

1. ..............................................................
2. ..............................................................
3. ..............................................................
4. ..............................................................
5. ..............................................................
6. ..............................................................

தயாரிப்பு:-
வேலுப்பிள்ளை அம்பாழகன்
ஆசிரியர்,
யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை

விடை நாளைய பத்திரிகையில்